பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 04 ஞாயிற்றுக்கிழமை (18.06.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 202

# பேசாலையில் படையினர் தாக்குதல்

# பெண் உட்பட 5 பொதுமக்கள் பலி!

## 54 பேர்வரை படுகாயம் வாடிகள், படகுகள் எரிப்பு

மன்னார்,ஜூன்18

**மன்னார், பேசாலையில் நேற்றுக் காலை கடற்படையினர் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதல்களில் பெண் உட்பட 5 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 54 பேர்வரை படுகாயமடைந்துள்ளனர். வாடிகள், படகுகள் உட்பட பொதுமக்களின் உடைமைகள் தீக்கிரையாக்கப்பட்டன.**

பேசாலையில் கடந்த வியாழக்கிழமை இரவு படையினரின் காவலரண் மீது கிரனேட் வீசப்பட்டது. இச்சம்பவத்தையடுத்து ஏற்பட்ட பதற்ற நிலையால் அப்பிரதேச மக்கள் பேசாலை வெற்றிநாயகி மாதா ஆலயத்தில் தஞ்சமடைந்திருந்தனர்.

இந்நிலையில் நேற்றுக்காலை மன்னார் கடற்பரப்பில் கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே சமர் இடம்பெற்றது. இதனையடுத்தே படையினர் பொதுமக்கள் மீது தாக்குதல்களை நடத்த ஆரம்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படைப் படகு விபத்தில் சிக்கியது; ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு,ஜூன்18

கொழும்பு அருகே கடலில் தேடுதல் நடத்திய கடற்படையினரின் படகு விபத்தில் சிக்கியதில் அதிலிருந்த கடற் படையினரில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் இருவரைக் காணவில்லை. மூவர் பாதுகாப்பாக மீட்கப் பட்டனர்.

ஜா-எல கடற்பரப்பில் அடையாளம் தெரியாத படகு ஒன்று வெடித்துச் சிதறிய சம்பவத்தையடுத்து அங்கு தேடுதலில் ஈடுபட்ட கடற்படைப் படகே கடல் கொந்தளிப்பால் விபத்துக்குள்ளானதாகக் கடற்படைப் பேச்சாளர் டி.கே.பி.தசநாயக்கா தெரிவித்தார்.

## வல்லையில் நேற்றிரவு மோதல்

யாழ்ப்பாணம்,ஜூன்18

வல்வெட்டித்துறையில் உள்ள பொலீஸ் மற்றும் இராணுவக் காவலரண் மீது நேற்றிரவு 7.45 மணியளவில் இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தினர் என்று கூறப்படுகிறது. இதன்போது அப்பகுதியில் இரு தரப்புகளுக்குமிடையே சிறிது நேரம் மோதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. சேத விவரம் குறித்து தெரியவரவில்லை.

## படையினரும் விடுதலைப் புலிகளும் மன்னார் கடற் பரப்பில் நேரடிச் சமர்

மன்னார்,ஜூன்18

மன்னார் பேசாலைக் கடற்பரப்பில் நேற்றுக் காலை 6.50 மணியளவில் கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே கடற்சமர் நிகழ்ந்தது.

இது குறித்து இலங்கைப் படைத் தரப்புக் கூறியதாவது:-

பேசாலையில் உள்ள கடற்படை நிலை மீது படகுகளில் வந்த் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். வான்படை மற்றும் ஆட்லறி பிரிவினரின் உதவியுடன் கடற்படையினர் புலிகள் மீது பதில் தாக்குதல் நடத்தினர். இந்த மோதலில் கடற்படையினர் 11 பேர் உயிரிழந்தனர். கடற்படையினரின் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 24 முதல் 30 பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. கடற்படையினரின் மூன்று கடற்கலங்கள் சிறிய அளவில் சேதமடைந்துள்ளன. இவ்வாறு படைத் தரப்புத் தெரிவித்தது.

கடற் சமர் குறித்து விடுதலைப் புலிகளின் அரசியற்துறை ஊடக அலுவலகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மன்னார் பேசாலையில் விடுதலைப் புலிகளின் கடற் பிராந்தியத்தில் நேற்றுக் காலை 7 மணியளவில் கடற் புலிகள் போக்குவரத்தில் ஈடுபட்டனர். அப்போது இலங்கைக் கடற்படையினர் 4 படகுகளில் அங்கு வந்தனர். அவர்கள் புலிகளின் படகுகள் மீது வலிந்து தாக்குதல் நடத்தினர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜா-எல கடலில் கைதான இருவர் சயனைட் உட்கொள்ள முயற்சி



கொழும்பு, ஜூன்18

ஜா-எல கடற்பரப்பில் நேற்றுக்காலை படகில் வந்திறங்கிய இருவரை படையினர் கைது செய்தனர் என்றும்-

அவர்களிருவரும் சயனைட் உட்கொள்ள முயற்சித்தனர் என்றும் - தெரிவிக்கப்பட் டது.

கொழும்பிலிருந்து 17 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ஜா-எல கடற்பரப்பில் நேற்றுக்காலை 6.30 மணிக்கு இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பமுனுகம மற்றும் எப முல்லவுக்கு இடையேயான கடற்கரையில் நேற்றுக்காலை இரு படகுகள் வந்தன. இவற்றிலிருந்து இருவர் தரையிறங்கினர். அப்பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் அவர்களைச் சுற்றி வளைத்தனர். அப்போது படகுகளில் ஒன்று தப்பிச் சென்றது. மற்றைய படகு வெடித்துச் சிதறியது.

இதற்கிடையில் சுற்றிவளைக்கப்பட்ட இருவரும் சயனைட் உட்கொண்டனர். அவர் களை படையினர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்த்தனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் பிடித்த ஆயுதக்குழுவினர் ஊடகவியலாளரைச் சந்தித்தனர்



மட்டக்களப்பு,ஜூன்18

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் தாக்குதல் நடத்த வந்த போது பிடிபட்டவர்களான மூவர் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்தனர்.

முனைக் காட்டைச் சேர்ந்த சுந்தரலிங்கம் திருநாவுக்கரசு, பங்குடா வெளியைச் சேர்ந்த அகிலன் எனப்படும் கதிகாமத் தம்பி இதயராசா மற்றும் புளொட் அமைப்பைச் சேர்ந்த புதூர் வாசியான நவரத்தினம் பிரதாபன் ஆகியோரே கொக்கட்டிச்சோலை சோலையகத்தில் ஊடகவியலாளரைச் சந்தித்தவர்களாவர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான இலுப்படிச்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வான் தாக்குதல்களுக்குப் பதிலடி: அரசுக்குப் புலிகள் எச்சரிக்கை!

கிளிநொச்சி, ஜூன்18

இலங்கை விமானப் படையின் வான் தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்க நேரிடும் என்று விடுதலைப் புலிகள் இலங்கை அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர் என்று -

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் உள்ள கள நிலைமைகளைப் புரிந்து கொள்ளாமல் கெப்பிட்டிக்கொல்லாவ தாக்குதலில் தமிழீழ விடுதலைப் புலிகளை குற்றம்சாட்டி சில நாடுகள் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. அத்தாக்குதலை தமிழீழ விடுதலைப் புலிகளும் கண்டனம் செய்துள்ளனர். கெப்பிட்டிக்கொல்லாவ பயணிகள் பஸ்ஸை தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்கவில்லை என்றும் அக்கிளைமோர்த் தாக்குதலுக்கும் எமக்கும் தொடர்பில்லை என்றும் தெரிவித்துள்ளோம்.

இத்தகைய கொடூரமான தாக்குதலுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பில்லை என்று மீண்டும் கூறுகிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளை சர்வதேச சமூகத்திடமிருந்து தனிமைப்படுத்துகிற சக்தி கள் குறித்து நாம் அவதானமாக உள்ளோம். அமைதி முயற்சிகளை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தரை, கடல், வான் படைகளை அங்கீகரிக்க இலங்கை அரசு மறுப்பு

### நோர்வே, ஐரோப்பிய ஒன்றியத்துக்குக் கடிதம்

கொழும்பு,ஜூன்18

தமிழீழ விடுதலைப் புலிகளின் தரை, கடல் மற்றும் விமானப் படைகளை அங்கீகரிக்க முடியாதென நோர்வேயிடமும், ஐரோப்பிய ஒன்றியத்திடமும் இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் இது குறித்த கடிதம் நோர்வேப் பிரதமர் ஜோன் ஸ்டோல்டன் பேர்க் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய ஆணையாளர் பெனிடா வோல்டினர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

தனியான அரசாங்கத்தை அமைக்க தமிழீழ விடுதலைப் புலிகள் திட்டமிடுவது அவர்களின் 7 விடயங்களைக் கொண்ட 6 பக்க ஒஸ்லோ அறிக்கையில் உறுதியாகிறது. ஜனநாயக அரசாங்கம் என்ற வகையில் விடுதலைப் புலிகளின் ஜனநாயக விரோத போக்கிற்கு அரசாங்கத்தினால் இணங்க முடியாது.

இலங்கைப் பாதுகாப்புப் படைக்கு சமமாக தமது படைப் பலத்தையும் கட்டியெழுப்ப

(16 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயோதிபர் சடலம் வீதியோரம் மீட்பு



யாழ்ப்பாணம்,ஜூன்18

அரியாலை பிரப்பன் குளம் மகா மாரி அம்மன் கோவில் வீதியில் நேற்றுக்காலை வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

சிவப்பு வர்ண சாரம் அணிந்த நிலையில் வீதியோரமாக இந்த சடலம் காணப்பட்டது. அரியாலை தென்.மேற்கு கிராமசேவையாளர் சடலத்தினை நேற்றுக் காலை 9.30 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தார்.

இது தொடர்பாக யாழ்.பொலீஸ் நிலையப் பொலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இச் சடலத்தை அடையாளம் காண உதவுமாறு பொலீஸார் கேட்டுள்ளனர். (190)

### கல்வி அமைச்சு நிர்ணயித்துள்ள

# பாடசாலை நேரத்தை மாற்றுவதானால் முன் அனுமதி பெறப்படுவது அவசியம்!

## மேலதிகக் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்தல்

அச்சுவேலி,ஜூன்18

கல்வி அமைச்சு நிர்ணயித்துள்ள பாடசாலைக் கடமை நேரத்தை மாற்ற விரும்பும் பாடசாலைகள் முன் அனுமதிபெறவேண்டும்.

இவ்வாறு வடக்கு - கிழக்குமாகாண கல்வித் திணைக்கள மேலதிக கல்விப் பணிப்பாளர் எஸ்.தண்டாயுதபாணி தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் உள்ள சகல பாடசாலைகளும் புதியநிர்வாக நேர அட்டவனையின் படி நாளைமுதல் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 1.30 மணிவரை ஆறு மணித்தியாலயங்கள் செயற்படும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கை மூலம் பாடசாலை அதிபர் மற்றும் மாகாண கல்வி அமைச்சு, வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கு அறிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின்படி சகல பாடசாலைகளும் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 1.30 மணி வரை நடைபெறும். முஸ்லிம் பாடசாலைகள் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 2.00 மணிவரையும் நடைபெறும். வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிவரை நடைபெறும். அலுவலகங்கள் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.15 மணிவரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள் செயற்பாடும் நேரம் தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள மேலதிக கல்விப் பணிப்பாளர் எஸ்.தண்டாயுதபாணி கருத்து தெரிவிக்கையில்:-

மத்திய கல்வி அமைச்சின் சுற்றிக்கையின் பிரகாரம் காலை 7.30 மணிக்கு வடக்கு கிழக்கில் உள்ள சகல பாடசாலைகளும் ஆரம்பிக்கும். இது தொடர்பாக பாடசாலை அதிபர்களுக்கும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தவிர்க்க முடியாத களநிலைமை காரணமாக பாடசாலை செயற்பாட்டு நேரத்தில் மாற்றம் செய்ய வேண்டி ஏற்பட்டால் வலயக்கல்விப் பணிப்பாளர் ஊடாக மாகாணக் கல்வி அமைச்சுக்கு எழுத்து மூலம் விண்ணப்பித்து முன்அனுமதி பெறவேண்டும் எனக் கூறினார்.

யாழ். மாவட்டத்தில் பொதுமைப்படுத்தப்பட்ட நேர அடிப்படையில் காலை 7.30 மணிக்கு சகல பாடசாலைகளும் நாளை திங்கட்கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளன. அலுவலகங்கள் ஆரம்பிக்கும் நேரத்திற்கும் பாடசாலைகள் ஆரம்பிக்கும் நேரத்திற்கும் இடையே ஒருமணிநேர இடைவெளி இருப்பதால் போக்குவரத்து நெருக்கடி இன்றி மாணவர்கள் ஆசிரியர்கள் பிரயாணம் செய்வதற்கு வாய்பாக இருக்கும் எனக் கூறப்படுகின்றது. (11)

## திருமலையில் துக்கதினம்

திருகோணமலை,ஜூன்18

அநுராதபுரம் கெப்பிட்டிக்கொல்லாவவில் நடந்த கிளைமோர் தாக்குதலைக் கண்டித்து திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக உள்ள பிரதேசங்களில் நேற்று துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

திருமலை, கந்தளாய், சேருவில ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற இத் துக்கதின அனுஷ்டிப்பால் வழமை நிலை பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (151)

# அசாதாரண நிலை காரணமாக கலைஞர்களின் வருமானம் வீழ்ச்சி

வலி.மேற்கு,ஜூன்18

யாழ்.குடாநாட்டில் தற்போது நிலவிவரும் அசாதாரண சூழ்நிலை காணமாக கலைஞர்களின் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது.

குடாநாட்டில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலையினால் ஆலயங்களில் இரவு நேரத் திருவிழாக்கள் நடைபெறுவது இல்லை. கலை, கலாசார நிகழ்வுகள் எதுவும் இடம்பெறுவதில்லை. இதனால் கலைஞர்களின் வருமானத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

தற்போதைய இராணுவ நடவடிக்கைகளினால் ஆலயங்களில் மாலை 6 மணிக்கு முன்பே திருவிழாக்கள் முடிவடைகின்றன. களியாட்ட, கேளிக்கை நிகழ்வுகளும் இப்போது நடைபெறுவதில்லை. இதனால் நாடக கலைஞர்கள், இசைக் குழுவினர், தவில் நாதஸ்வரக் கலைஞர்கள் ஆகியோர் உட்பட அனைத்துக் கலைஞர்களின் வருமானமும் வீழ்ச்சியடைந்துள்ளது.

கோடை காலத்தில் இரவு நிகழ்வுகள் அதிகம் இடம்பெற்று வந்ததாகவும் -

அதன்போது கிடைக்கும் வருமானத்தை வைத்தே தாம் வருடத்தின் எஞ்சிய காலத்தை சமாளித்து வந்தனர் என்றும் - கலைஞர்கள் கூறுகின்றனர்.

குறிப்பாக ஆலய உற்சவங்கள் அதிகம் இடம்பெறும் இக் காலகட்டத்தில் உபயகாரர்கள் ஏற்பாடு செய்யும் இரவு நிகழ்வுகள் அடியோடு நின்று போயிருப்பதால் தாம் வருமானமிழந்துள்ளனர் என்றும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (175)

## ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் வெடிகுண்டு

மட்டக்களப்பு, ஜூன்18

வாழைச்சேனையில் ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் நேற்றுமாலை 5 மணியளவில் கிளைமோர் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து படையினர் அங்கு தேடுதல் நடத்தினர்.

கிளைமோர் அடங்கிய பொதி ஒன்று அங்கு இருப்பதாகத் தெரிவித்ததை அடுத்து அங்கு தேடுதல் நடத்திய படையினர் சிறிய ரகக் குண்டு ஒன்றைக் கைப்பற்றினர்.

பின்னர் அதைச் செயலிழக்கச் செய்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து-

அந்த அலுவலகத்தில் இருந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இருவரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

# ஆழ ஊடுருவும் அணியைத் தாக்கிய மக்கள் படையினர் கௌரவிப்பு

கிளிநொச்சி,ஜூன்18

வவுனியா நைனாமடுவில் ஆழ ஊடுருவும் இராணுவப் படையினரை சுட்டுக்கொன்ற மக்கள் படையினர் நேற்றுக் கௌரவிக்கப்பட்டனர்.

இது குறித்து தெரிவிக்கப்பட்டதாவது:-

நைனாமடுவினுள் ஊடுருவிய படையினர் மூன்று நாள்களாக விடுதலைப் புலிகள், தமிழீழ தேசியத்துணைப்படையினர் மற்றும் மக்கள் படையினர் ஆகியோரால் சுற்றிவளைக்கப்பட்டிருந்தனர். இந்த முற்றுகையை மக்கள் படையினரின் பகுதி வழியாக உடைத்து வெளியேற படையினர் முயன்றனர். அவ்வேளை மக்கள்படை உறுப்பினர் ஒருவரால் படைச் சிப்பாய் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்நடவடிக்கையில் திறமையுடன் செயலாற்றிய மக்கள்படை உறுப்பினர்கள் நேற்று கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட கட்டளைத் தளபதி வேலவன், சாள்ஸ் அன்ரனி படையணி சிறப்புத் தளபதி நகுலன், விளையாட்டுத்துறை பொறுப்பாளர் பாப்பா ஆகியோர் பங்கேற்றனர்.

அதிவிஷேட பயிற்சி பெற்ற இராணுவத்தினரைச் சுட்டுக் கொன்ற மக்கள்படை போராட்ட வரலாற்றில் புதிய அத்தியாயமாக உருவெடுத்துள்ளது என்று நிகழ்வில் கட்டளைத் தளபதி வேலவன் பாராட்டினார்.

படைச்சிப்பாயை சுட்டுக்கொன்ற மக்கள் படை உறுப்பினரான ஜெயாவுக்கு சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணி தளபதி நகுலன் பரிசில் வழங்கி கௌரவித்தார்.

# பெண் உட்பட தமிழர் இருவர் மஹியங்கனையில் வைத்துக் கைது

மகியங்கனை மக்குலுகொல்ல பகுதியில் வைத்து பெண் உட்பட இரு தமிழர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோகநாதன் (வயது 19), மன்னாரைச் சேர்ந்த இரு குழந்தைகளின் தாயான அஞ்சலா (வயது 27) ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்டபோது அப்பெண் வழங்கிய தகவல்கள் அனைத்தும் பொய்யானவை என்றும் - அவரது அடையாள அட்டையும் போலி என்றும் - பொலீஸார் கூறியுள்ளனர்.

சிங்கள இளைஞர் ஒருவருடன் தங்களுக்கு இருக்கும் நட்பின் காரணமாகவே தாம் அப்பகுதிக்கு வந்தார்கள் என அவ்விருவரும் தெரிவித்துள்ளனர். இவர்கள் மகியங்கனையில் உள்ள சிங்கள நண்பர் வீட்டில் ஒருநாள் தங்கியுள்ளனர். இரண்டாவது நாள் அவர்கள் குறித்து சந்தேகித்த அயலவர்கள் பொலீஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர்.

தான் யாழ்ப்பாணம் சென்றிருந்த நேரம் தனக்கு இந்த தமிழ் வாலிபர் உதவியதால் தங்களுக் கிடையில் நல்லதொரு நட்பு நிலவுவதாக சிங்கள இளைஞர் பொலீஸாரிடம் கூறியுள்ளார்.

இரு தமிழர்களுடன் அந்த சிங்கள இளைஞரையும் கைதுசெய்த பொலீஸார் மூவரையும் மஹியங்கனை நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். இதனையடுத்து மூவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# அமைதி தேடிப் பிரார்த்தனை வாரம் மட்டு. மாவட்டத்தில் அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு,ஜூன்18

மட்டக்களப்பு மாவட்ட அனைத்து மதங்களின் சமாதானத்துக்கான ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கடந்த 5ஆம் திகதி முதல் 11 ஆம் திகதிவரை 'அமைதியைத் தேடி' என்ற கருப்பொருளில் பிரார்த்தனை வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.

இது குறித்து மேற்படி ஒன்றியம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம், பௌத்த மதத் தலைவர்கள் ஒன்றுகூடி சகல நிகழ்வுகளிலும் பங்குபற்றி உணர்வுபூர்வமாகப் பிரார்த்தனைகளை நடத்தி வைத்தனர். இந் நிகழ்வுகளில் பெருமளவு மக்கள் பங்குபற்றி பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

இறுதியில் மட்டக்களப்பு மாவட்ட சமாதானத்துக்கான பல்சமய ஒன்றியத்தின் தலைவர்களான மட்டக்களப்பு, திருமலை ஆயர் பேரருள் திரு.ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, கல்லடி இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி அஜரத்மானந்தாஜீ, காத்தான்குடி ஜமியத்துல உலமா சபைத் தலைவர் அல்ஹாஜ் முஸ்தபா ப.:ஜி, மங்களராம விகாராதிபதி வண.அம்பிட்டிய சுமணரத்தின தேரோ ஆகியோர் ஒன்றாய் இணைந்து இந் நாட்டிலே வாழ்கின்ற மக்களுக்கு நிரந்தர சமாதானத் தீர்வு கிட்டி தனிமனித உள்ளத்தில் சாந்தியும் சமாதானமும் நிலவும் வரை பிரார்த்தனையில் தொடர்ந்தும் ஈடுபடுமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

இந்நாட்டில் நிரந்தர அமைதியினையும் சமாதானத்தையும் ஏற்படுத்தக்கூடிய சக்தி மிக்க தரப்பினர்கள் அனைவருக்கும் அவர்கள் பின்வரும் வேண்டுகோள்களை விடுத்தனர்.

சமாதான ஏற்பாட்டினை திறந்த மனதுடனும், கருணையுள்ளத்துடனும், உண்மையுடனும் செய்யுங்கள். வன்செயல்களைத் தூண்டும் மனநிலையையோ அல்லது வஞ்சம் தீர்த்தலையோ முற்றாக நீக்குங்கள்.

நாட்டின் சமாதானத்தை முழுமையாக அடைவதற்கு தனிமனித உள்ளங்களிற் சமாதான சிந்தனைகள் தவிர்க்க உதவுங்கள்.

சகல உயிரினங்களிலும் பூரணமான அன்பையும் ஆதரவையும் செலுத்துங்கள்.

புரிந்துணர்வும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும், வெளிப்படையான உண்மைப் பொருளையும் கொண்ட பேச்சு வார்த்தையில் ஈடுபடுங்கள். அது இந்நாட்டு மக்களின் துன்பங்களையும், துயர்களையும் போக்கி ஒரு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் என்பது உறுதி.

பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் முடிவுகளை நடைமுறையில் செய்துமுடிக்க காலவரையறையை குறிப்பிட்டுத் தீர்மானியுங்கள். அதனைச் செய்து முடிப்பதை கண்காணித்து உறுதிசெய்வதற்கு வெளிநாட்டினர், உள்நாட்டினர் அடங்கிய கண்காணிப்புக் குழு ஒன்றை அமையுங்கள்.

இன்னும் ஓர் யுத்தம் இந்நாட்டில் ஏற்படாது இருக்க அனைவரும் இதய சுத்தியுடனும், திறந்த மனத்துடனும் செயற்படுங்கள். எதையும் பேசித் தீர்க்க முயலுங்கள்.

இவை அனைத்தும் நிறைவேற இறைவனைப் பிரார்த்திக்கின்றோ இலங்கை வாழ் மக்கள் அனுபவித்து வருகின்ற துன்பங்கள், துயரங்கள், கலாசாரச் சீர்கேடுகள், அநீதி, அநியாயங்கள் இவைகளைப் போக்கி அவர்கள் வாழ்வில் நிலையான சாந்தியும், சமாதானமும் ஏற்பட அனைவரும் அயராது பாடுபடுவோம். இவற்றில் ஈடுபடும் வெளிநாட்டவர், உள்நாட்டவரின் சேவையினை பாராட்டுவதுடன் அவர்களின் முயற்சி வெற்றியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். என்று தெரிவிக்கப்பட்டது.

உங்கள் விமானப் பயணத்திற்கு
Aero Lanka
In Domestic Operation
New way of Flying

Head Office
No.500, Galle Rd.,
Colombo-6, T:2505 632/3
Fax: 2500 626
Trinco Office
No.47, Kandy Rd.,
Trincomalee. T: 026 222 1519
Fax: 026 2221519
Jaffna Office:
No.86, Point Pedro Rd.
Jaffna. T:021 222 6242
021 2223984
Branch:
No.14, New Market Bldg.,
Chavakachcheri.T: 021 2227979
Fax: 021 2227979
யாழ் - கொழும்பு விமான சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

# வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய கெப்பிட்டிக்கொல்லாவைப் படுகொலைகள்

நாட்டில் அதிகரித்து வரும் வன்முறைகளில் நேரடியாகப் போரில் சம்பந்தப்படாத அப்பாவிகள் பெருமளவில் கொல்லப் படுவது பலரையும் அதிர்ச்சிக்குள்ளும் விசனத்துக்குள்ளும் ஆழ்ந்த கவலைக்குள்ளும் ஆழ்த்தியிருக்கின்றது.

அந்த வகையில், அநுராதபுரம் மாவட்டம் கெப்பிட்டிக்கொல் லாவையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த 64 பொதுமக்கள் குரூரமான தாக்குதல் ஒன்றில் படுகொலை செய்யப்பட்டிருக் கின்றனர். மேலும் பல டசின் கணக்கில் படுகாயமடைந்தவர் களில் பலரின் நிலைமை கவலைக்கிடமானதாக - உள்ளது எனக் கூறப்படுகின்றது. இவ்வாறு கொல்லப்பட்ட அல்லது படுகாய முற்றவர்களில் பெரும்பாலானவர்கள் - ஒருவகையில் எல்லோ ருமே - யுத்தத்தோடு நேரடியாகச் சம்பந்தப்படாதவர்கள் என்று கூறப்படுகின்றது. அவர்களில் ஊர்காவலர் சிலரைத் தவிர ஏனையோர் யுத்த நடவடிக்கைகளோடு தொடர்புடையவர்களே அல்லர். இவ்வாறு அப்பாவிகள் படுகொலை செய்யப்பட்டு அல்லது படுகாயப்படுத்தப்பட்டிருப்பது மனதை உலுக்குகின் றது. இந்தக் கொடூரத்தை - யார் செய்திருந்தாலும் - என்ன நோக் கத்திற்காக செய்திருந்தாலும் - அது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது. நாகரிக சமுதாயத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத - மனிதத்துவமே இல்லாத - இச்செயலை நாமும் உறுதியாகக் கண்டிக்கிறோம்.

திருகோணமலையில் தமிழ் மக்கள் பேரவைத் தலைவரும் தமிழ் ஆர்வலருமான விக்னேஸ்வரன் கொலை தொடங்கி, அதற் குப் பின்னர் இன்று வரை தமிழர் தாயகத்தில் கொத்துக்கொத்தாக வும், கொடூரமாகவும் படுகொலை செய்யப்பட்டு வரும் அப்பா வித் தமிழர்களின் மரணங்கள் வரை இடம்பெற்ற - பொதுமக் களுக்கு எதிரான - ஏனைய அனைத்துப் படுகொலைகளையும் கண்டித்த அதே வீறோடும் வீச்சோடும் இந்தக் கோழைத்தன மான தாக்குதலையும் கண்டிக்கின்றோம்; உயிரிழந்த அப்பாவி களின் குடும்பத்தவர்களுக்கும் உற்றாருக்கும் எமது ஆழ்ந்த இரங் கலைத் தெரிவிக்கின்றோம்.

அதேசமயம், திருகோணமலை நகர மத்தியில் கடற்கரை யோரத்தில் ஐந்து அப்பாவி மாணவர்களும் அல்லைப்பிட்டியில் சிறுவர்கள், பெண்கள் உட்பட பதின்மூன்று பொதுமக்களும், மூதூரில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் கண்மூடித்தன மான விமானக்குண்டு வீச்சில் பத்துக்கு அதிகமான குடிமக்களும், மன்னார் - வங்காலையில் இரு சிறார்கள் உட்பட ஒரே குடும்பத் தவர் நால்வரும் கோரமாகக் கொல்லப்பட்ட தொடரில் ஒன்றாக கெப்பிட்டிக்கொலாவப் படுகொலையும் சேர்ந்திருப்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம்.

ஆயுதபாணிகளுக்கு - படைகளுக்கு - இடையிலான போராட் டத்தை பொதுமக்களுக்கு எதிராகத் திருப்ப முற்பட்டதன் ஒரு வெளிப்பாடாகவும் - விளைவாகவும் - கூட கெப்பிட்டிக்கொல் லாவைத் தாக்குதலைக் கருதமுடியும்.

ஸ்ரீலங்கா அரச படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயகத்தில் அண்மைக்காலமாக அப்பாவித் தமிழர்கள் அரச படைகளின் துணையோடு இயங்கும் ஒட்டுப்படைகளினால் வகைதொகையின்றி கொல்லப்பட்டு வருகின்றனர். இக்கொலை கள் தொடர்பாக உரிய விசாரணைகளையோ, ஒழுங்கு நடவடிக் கைகளையோ, தடுப்பு ஏற்பாடுகளையோ அரசுத் தலைமை எடுக்கவில்லை என்று பல தரப்பினராலும் குற்றஞ்சுமத்தப்பட்டு வந்தது. சர்வதேச நாடுகள், சர்வதேச அமைப்புகள், மனித உரிமை கண்காணிப்புக் குழுக்கள் என்று தொடங்கி கடைசியாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் வரை பல தரப்பின ராலும் இக்குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டு வந்தது. விசாரணை களை கண்துடைப்புக்கு நடத்தி அல்லது விசாரணைகளைத் திசை திருப்பி நாடகம் ஆடி வந்த அரசுத் தலைமைக்கு அந்தப் பொறுப்பற்றதனத்தின் - நோக்கின் விளைவு எந்தளவு வரை சென்றிருக்கின்றது, மேலும் எந்த நிலைவரை அது மோசமாகச் செல்லக்கூடும் என்பன பற்றிய ஒரு பட்டறிவுப் பாடம் கெப் பிட்டிக்கொல்லாவை துன்பியல் நிகழ்வின் மூலம் கிடைத்திருக் குமா என்பதும் கவனிக்க வேண்டியதாகும்.

கெப்பிட்டிக்கொலாவையில் கொடூரமாகக் கொல்லப்பட்ட வர்கள் எல்லோரும் பெரும்பான்மையினத்தவர்கள். ஆகவே அவர்களைக் கொன்றவர்கள் சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்கள் தாம், புலிகள்தாம் என்று பல தரப்புகளிலும்கருத்துக் கூறப்படுகின்றது. ஸ்ரீலங்கா அரசும் தென்னிலங்கை ஊடகங்க ளும் அப்படித்தான் பிரசாரம் செய்கின்றன. ஆனால் விடுதலைப் புலிகள் இந்தத் தாக்குதலைவன்மையாக - கடுமையாக - கண் டித்துள்ளதுடன், இது புலிகள் மீது பழியைச் சுமத்தும் சதித்திட்ட நோக்குடன் முன்னெடுக்கப்பட்ட ஒன்று என்றும் தெரிவித்தி ருக்கின்றனர்.

இதில் யாருடைய தரப்பு உண்மையை உரைகின்றது என் றாலும் ஒன்றை நாம் மறந்துவிடக்கூடாது. அரசியல் அதிகாரத் தைக் கைப்பற்றுவதற்காக - தென்னிலங்கையில் - பல்லாயிரக் கணக்கில் தமது சொந்த இன மக்களையே சுட்டும் வெட்டியும் படுகொலை செய்து, முண்டங்களாவும் அரைநிர்வாண நிலை யிலும் வீதிகளிலும் பகிரங்க இடங்களிலும் அந்த மக்களை ரயர்போட்டு எரித்த, படுபாதகக் கொடூரம் புரிந்த ஓர் அணியினரை சகாக்களாக அரவணைத்துக் கொண்ட ஓர் ஆட்சிதான் கொழும் பில் இன்று அரசோச்சுகின்றது என்பதே அது.

தமிழர் தாயகத்தில் ஒட்டுப்படைகளை வைத்து படுபயங்கர வாதச் செயல்களை - படுகொலைகளை - நிகழ்த்திவரும் அரச படைகளின் புலனாய்வுப் பிரிவுகளில், இவ்வாறுமுன்னர் ரயர் போட்டு எரிக்கும் கொலைக் கலாசாரத்தின் முன்னிலையில் திகழ்ந்த அணியினரின் செல்வாக்கும், அதிகாரமும், ஊடுருவ லும் இப்போது எல்லை கடந்து அதிகமாக - அதீதமாக - உள்ளது என்பது வெள்ளிடைமலை.

ஆகவே, தமிழரின் விடுதலைப் போராட்டத்துக்கு கடுமை யான எதிர்ப்பைக் காட்டிவரும் இந்த பௌத்த - சிங்கள பேரின வாத அணியினர் தமிழர்களின் விடுதலைப் போராட்ட சக்தியான புலிகளுக்கும் தமிழர்களுக்கும் சர்வதேச ரீதியில் இழுக்கும், கெடுதலும், பாதிப்பும், எதிர்ப்பும் வேண்டித் தருவதற்காக இத் தகைய கொடூரத் தாக்குதலுக்கான சதியைப் பின்னியிருக்கக் கூடும் என்ற வாதத்தையும் புறமொதுக்கிவிட முடியாது.

அரசியல் அதிகாரத்தை அடைவதற்காக - சுவீகரிப்பதற்காக - தமது மக்களையே பல்லாயிரக்கணக்கில் படுபாதகமான முறை யில் கொன்றொழித்தவர்கள் - பேரினவாத அடக்குமுறையில் ஊறித் திளைத்தவர்கள் - சிறுபான்மையினரின் விடுதலைப் போராட்ட சக்திகளுக்கு பேரிழப்பும், பேரிழுக்கும் தேடித்தருவ தற்காக தமது மக்களில் ஒரு நூறு பேரை பலி கொடுக்கவும் - பலியெடுக்கவும் - கூடத்தயங்கமாட்டார்கள் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளத்தான் வேண்டும்.

எது, எப்படியென்றாலும் கெப்பிட்டிக்கொல்லாவைத் தாக்குதல்கள் போன்ற - போரில் சம்பந்தப்படாத அப்பாவி மக்க ளுக்கு எதிரான - இத்தகைய படுகொலைகளை இனம், மதம், மொழி, அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று கண்டிப்ப தும் எதிர்ப்பதும் அனைவரதும் தவிர்க்கமுடியாத நிலைப்பாடாகும்.

# விவசாய நிலங்களை ஆக்கிரமித்து வட்டு. பொலீஸ் நிலையம் விஸ்தரிப்பு

## நஷ்டஈடு வழங்குமாறு விவசாயிகள் கோரிக்கை

வலி.மேற்கு,ஜூன்18

வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை பொலீஸ் நிலையம் பலப்படுத்தப்பட்டு வருகின்றது.

குறிப்பாக விவசாய நிலங்கள் ஆக் கிரமிக்கப்பட்டு காவலரண்கள் நிறுவப் பட்டு வருகின்றன.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல் லூரிக்குச் சமீபமாக அமைந்துள்ள மேற்படி பொலீஸ் நிலையத்தில் புதி தாக பனைமரங்களினால் காவல் அரண்கள் நிறுவப்படுகின்றன.

அத்துடன், பொலீஸ் நிலையத்தைச் சுற்றியுள்ள வயற்காணிகளுக்குள்ளும் காவல் அரண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு பெரும்போக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல் நிலப்பரப்பு, பொலீஸாரினால் ஆக்கிர மிக்கப்பட்டு கம்பிவேலி அமைக்கப் பட்டுள்ளது.

இதனால், ஆக்கிரமிக்கப்பட்ட வயல் நிலப்பரப்புக்கு சொந்தக்காரர்களான விவசாயிகள் உபதானிய செய்கையை மேற்கொள்ள முடியவில்லை என்று தெரிவித்தனர்.

இத்தகைய நிலைமைகளால் வயல் நிலங்களில் இந்த ஆண்டுக்கான பெரும்போகச் நெற்செய்கையை மேற் கொள்ளமுடியாது எனத் தெரிவித்த விவசாயிகள் நஷ்டஈடு வழங்கவேண் டும் என்றும் வேண்டுகோள் விடுத் துள்ளனர்.

(175)

# படையினர் விதித்த தடையால் வடமராட்சி மீனவர்கள் சிரமம்

வடமராட்சியின் பல்வேறு பகுதி களிலும் இருந்து கடற்றொழிலுக்குச் செல்லும் மீனவர்கள், படையினர் விதித் துள்ள சில கட்டுப்பாடுகளால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுவதாக முறைப்பாடு தெரிவிககப்படுகிறது.

கடற்றொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைகளுக்கு வசதி செய்து கொடுக் கும் நோக்குடன் இராணுவ அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளி டம் அனுமதிபெற்று கடற்கரையோர மாக பல இடங்களிலும் வான் தோண்டி விடப்பட்டிருந்தது.

மீன் பிடிப்படகுகளின் போக்குவரத்து வசதியினைக் கருத்தில் கொண்டு நிறு வப்பட்ட 'வான்'களால் தரிப்பு இடங்கள் கடற்றொழிலாளர்கள் பெரும் நன்மை அடைந்தனர்.

இந்த நிலையில், கரையோரப்பகுதி யில் நிலைகொண்டுள்ள படையினர், மீனவரின் நன்மை கருதிதோண்டப் பட்ட 'வான்'கள் பலவற்றைப் பயன் படுத்த அனுமதி மறுத்துள்ளதுடன்- ஒரு சில 'வான்'களையே பயன்படுத்த அனுமதிக்கின்றனர் என்றும் - கூறப்பட் டது. (70)

# பின்தங்கிய கிராமங்களை அபிவிருத்திசெய்ய ஏற்பாடு

நாடுபூராகவுமுள்ள ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் இருந்து 'கமந கும்' கிராமிய அபிவிருத்தித் திட்டத் தின் கீழ் ஒவ்வொரு பின்தங்கிய கிரா மம் தெரிவுசெய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கை களை கிராமிய வாழ்வாதார அபிவி ருத்தி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

நாடு பூராவுமுள்ள சகல கிராம அலு வலர் பிரிவிலும் இருந்து மிகவும் பின் தங்கிய வறிய குடும்பங்களைக் கொண்ட கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு பல தரப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இது தொடர்பான சுற்றறிக்கை யொன்றினை கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி அமைச்சு சகல அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளது. (175)

# சுழிபுரம் பாண்டவெட்டையில் 62 மலசலகூடங்கள் நிர்மாணிப்பு

வலி.மேற்கு, ஜூன் 18

சுழிபுரம் பாண்டவெட்டைக் கிரா மத்திலுள்ள 62 குடும்பங்களுக்கு மல சல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப் படவுள்ளன.

இதற்கான ஆரம்பக்கட்ட நடவ டிக்கைகளை பிரதேச செயலக திட்டமி டல் பகுதியினர் மேற்கொண்டு வரு கின்றனர்.

'யுனிசெப்' நிறுவனத்தினரின் நிதியுத வியுடன் வருமானம் குறைந்த -வசதி களற்ற குடும்பங்கள் இந்த மலசலகூட வசதியைப் பெற்றுள்ளன. ஒவ்வொரு குடும்பத்திற்கும் சுமார் 70 ஆயிரம் ரூபா பெறுமதியான மலசல கூடங்களே அமைத்துக் கொடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பதில் பிரதேச செயலர் திருமதி பாபு தேவந்தினி பயனாளிகளைத் தெரிவு செய்யுமாறு அப்பகுதி கிராம அலுவலரையும், சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதிகளையும் பணித்துள்ளார்.(175)

# அச்சுவேலி ஆஸ்பத்திரியில் ஏ.ஆர்.வி.தடுப்பூசி ஏற்ற வசதி

அச்சுவேலி,ஜூன் 18

அச்சுவேலி அரசினர் வைத்திய சாலையிலும் விலங்கு விசர் நோய் தடை மருந்து (ஏ.ஆர்.வி) ஏற்றுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் இது வரைகாலமும் விசர் நாய் மற்றும் விலங்குகளினால் கடி யுண்ட வேளைகளில் யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்றே விலங்கு விசர் நோய்த் தடை மருந்தை ஏற்றி வந்தனர்.

நோயாளரின் சுகதியை கருத்தில் கொண்டு விலங்குவிசர் நோய்த்தடை மருந்தை பயன்படுத்துவதற்கான ஏற் பாடுகள் அச்சுவேலி அரசினர் வைத்தி யசாலையில் செய்யப்பட்டிருப்பதாக அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர்சி.விமலேந்தி ரன் தெரிவித்தார். (11)

## நாளை

ஆனி- 05
திங்கட்கிழமை
19.06.2006
திதி : அட்டமி
முற்பகல் : 8.28
நட்சத்திரம் : உத்தரட்டாதி
முன்னிரவு : 08.18
சுபநேரம் : 11.54-01.24
ராகுகாலம் : 07.24-0854

## உதயவாக்கு

அறிஞர் நஷ்டம் வந்தால் அழுது கொண்டிரார் துன்பத்தைத் துடைக்கும் வழியைத் தேடுவார்.

- ஷேக்ஸ்பியர்.

# அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு சிசுவின் நாடித் துடிப்பு அறியும் கருவி கிடைத்தது

அச்சுவேலி,ஜூன்19

அச்சுவேலி அரசினர் வைத்திய சாலைக்கு தாயின் வயிற்றில் இருக்கும் சிசுவின் நாடித் துடிப்பினை அளவீடு செய்யும் கருவியான 'டோப்பிளர்' வழங் கப்பட்டுள்ளது.

கிராமிய மட்டத்தில் பொதுமக்களுக் கான வசதிகளை மேம்படுத்தும் செயற் றிட்டத்தின் கீழ் இந்தக் கருவி வழங்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாகாண பிரதி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் இவை வழங்கப்பட்டுள்ளன. (11)

# நீர்வேலியில் மிதிவெடி அகற்றிய பகுதி பிரதேசசெயலகத்திடம் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்18

நீர்வேலி கண்ணாடி தொழிற்சாலைப் பகுதியில் ஹலோட்ரஸ்ட் நிறுவனத்தி னால் மிதிவெடி அகற்றப்பட்ட பிரதே சங்கள் கடந்த வியாழக்கிழமை மீளவும் கையளிக்கப்பட்டுள்ளன. 40 ஆயிரத்து 882 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்ட மிதிவெடி அகற்றும் பணியின் போது 111மிதி வெடிகளும். இரண்டு வெடிபொருள்களும் மீட்கப் பட்டுள்ளன எனக் கூறப்படுகிறது.

மிதிவெடி அகற்றப்பட்ட பிரதேசம், மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தி னால் கோப்பாய் பிரதேச செயலக அதி காரிகளிடம் கையளிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (190)

# குருநகர் முன்னணி அலுவலகத்தில் உள்ளக விளையாட்டு அலகு திறப்பு

குருநகர், ஜூன் 18

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன் னணி அலுவலகத்தின் ஒரு பகுதியில் உள்ளக விளையாட்டு அலகு ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முன்னணியின் தலைவர் அ.அகஸ் ரின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் பிரதேச செய லர் எம்.பற்றிக் டிறைஞ்சன் பிரதம அதிதி யாகக் கலந்துகொண்டு நாடாவை வெட்டி விளையாட்டு அலகினைத் திறந்துவைத்தார்.

இதில் றெக்கிளமேஸன் கிழக்குப் பிரிவிற்கான கிராம உத்தியோகத்தர் எஸ். யூலன், குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை வண.பிதா ஆர்.எச்.சகா யநாயகம் அடிகளார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் கலந்து கொண்டனர்.

மேற்படி உள்ளக விளையாட்டு அலகின் 'ரேபிள் ரெனிஸ்', 'டாம்', 'கரம் போட்', 'சதுரங்கம்' போன்ற விளையாட் டுக்களுடன் சிறுவர்களுக்கான விளை யாட்டுக்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த விளையாட்டு உபகரணங் களை கொள்வனவு செய்வதற்குரிய நிதியை பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் நாடாளுமன்ற உறுப் பினர் மாவை சேனாதிராஜா வழங்கி இருந்தார் என முன்னணியின் தலைவர் அ.அகஸ்ரின் தெரிவித்தார்.

குருநகர் மக்களின் உள்ளக விளை யாட்டுக்களை அபிவிருத்தி செய்வதற் காக மிகவும் குறுகிய இடத்தில் ஆரம்பிக் கப்பட்டுள்ள இந்த அலகை குருநகரில் வேறு ஒரு வசதியான இடத்தில் விசால மாக அமைப்பதற்கான ஒரு இடத்தைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையை குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பு மேற்கொண்டுள்ளதுடன், இந்த விளையாட்டுக்களில் கலந்து கொள்ளவுள்ளவர்களுக்கு உறுப்புரிமைப் படிவங்கள் வழங்கப்படவுள்ளதாகவும்- அவர் மேலும் தெரிவித்தார். (51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

3 Sri தொடர் இலக்க மொறிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: 101, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (51309)

Sharp புறொஜெக்ரர் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.சிறீ T.P.0777111400 (51311)

## வான் விற்பனைக்கு

251 - XXXX என்ற இலக்கம் உடைய வான் விற்பனைக்குண்டு. (கைறுப் ரக வாகனம்) தொடர்பு: 077- 3715870 (51259)

## நாய்கள் விற்பனைக்கு

German Shepherd 2 மாதம் நிரம்பிய ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. German Shepherd Great dane நாய்கள் Crossing இற்கு விடப்படும். தொடர்பு: Pragash No.95, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (இலுப்பையடிச் சந்தி அருகில்) T.P. 0773501011 (51303)

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி, பணிக்கர் வளவில் 1½ பரப்பு 02 குழி காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 0773644689 (51288)

பிறவுண் வீதி, கொக்குவிலில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: S.சிறீ 0777111400 (51310)

## வீடு விற்பனைக்கு/ வாடகைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில் கச்சேரியில் இருந்து 300m தூரத்தில் சகல வசதிகளுடன் வீடு விற்பனைக்கு/வாடகைக்கு உண்டு. தொடர்பு: 0773222902 (513 1)

## தவறிவிட்டது

பால்பண்ணை வீதி, கொக்குவில் மேற்கு என்ற முகவரியை உடைய மனோகரன் ஜெயராணி என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல.0902039808) கல்வியங்காட்டுச் சந்தைக்கும் கொலனி வீட்டுத் திட்டத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். (51306)

திருச்செல்வம் -வாமதேவன் என்பவருடைய தே.அ.அ (812645536V) யாழ்.நகருக்கும் சுண்டுக்குளிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் T.P இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 077- 3581916, 077- 6153599. (51305)

Pepsi சின்னம் பொறிக்கப்பட்ட கறுப்புநிற Fill ஒன்று 16.06.2006 அன்று ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணத்திற்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் 0776000240, 0214591312 அல்லது S.V. முருகேஸ் விற்பனை நிலையம், ஆஸ்பத்திரி வீதி, எனும் முகவரியுடைனோ தொடர்பு கொள்ளவும். (51292)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டுமுறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broilar குஞ்சுகள் பேட்டுக் குஞ்சுகள் 19.06.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்துறை நெல்லியடிக் கிளைகளிலும் ட்டி ாம் - வட்டுக்கோட்டை, கரன் - ஆலடி, உடுவில் ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-49613)

## வீடு வாடகைக்கு

யாழ்.நிலஅளவைக் திணைக்களத்திற்கு அருகே கோயில் வீதி, 127/2, இலக்கத்தில் அமைந்துள்ள 6 அறைகள், நாற்சார் கொண்ட (4 இணைந்த குளியலறைகள்) வீடு உடன் வாடகைக்குக் கொடுக்கப்படும். வாகனத் தரிப்பு வசதிகளும் சாரதிகள் தங்கும் வசதிகளும் தனியாக உள்ளன. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு மிகப் பொருத்தமானது. தொடர்பு: 0714220003, 222-3130. (51308)

வண்ணார்பண்ணை, பிரப்பங்குளம் வீதியில் பகுதி வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 32, பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (51304)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அனுஷ நட்சத்திரம், 34 வயது, கிரக பாவம்14, செவ்வாய் அற்ற பிரபல பாடசாலையொன்றின் பட்டதாரி ஆங்கில ஆசிரியருக்கு மணமகள் தேவை. அரச அலுவலகங்களில் கடமைபுரியும் பட்டதாரி அலுவலர்கள், ஆசிரியை மற்றும் வங்கி, டாக்டர் விரும்பப்படும். முழுவிவரங்களுடன் (ஜாதகம்) உடன் தொடர்பு கொள்ளவும். இலக்கம் 2891, மே/பா உதயன். (சி-49679)

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 31 வயது Engineer M.Sc. செய்வதற்கு Student Visa வில் U.K சென்றுள்ள செவ்வாய்க் குற்றமற்ற மகனுக்கு மணமகள் தேவை. U.K இல் இருப்பவர் விரும்பத்தக்கது. குடும்ப விவரம் ஜாதக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 2888 மே/பா, உதயன். (51077)

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 29 வயது B.Sc. அரசாங்க சேவையில் தொழில் புரியும் செவ்வாய்க் குற்றமற்ற மகனுக்கு அதே தராதரமுடைய மணமகள் தேவை. குடும்ப விவரம் ஜாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு விளம்பர இல. 2889 மே/பா உதயன். (51078)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப, லக்கினத்தில் செவ்வாய், கிரகபாவம் 61½ பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியை, 1975 ஆம் ஆண்டு, பூரம் நட்சத்திரம் மணமகளுக்குத் தகுந்த மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். T.P.0773126456 (51255)

## திருமண சேவை

அடுத்த தடவை வெள்ளவத்தைக்கு வரும் வேளை வேல் அமுதனைச் சந்திக்கலாம். சுகமாக 'சுயதெரிவு முறையில்' தங்கள் மக்களுக்கு வாழ்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கலாம்!!! விவரங்களுக்குத் தசாப்த விழாக் கண்ட சுயதெரிவுமுறை முன்னோடி மூத்த சர்வதேச திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழு வேல்அமுதனைத் தொடர்பு கொண்டு விசாரித்தறிக! தங்கள் வேல் அமுதனின் கொழும்பு நேரடித் தொலைபேசி 2360488, 4514396, 0602158067 (சி-49682)

## Organ/Violin Notes

217 சினிமாப்பாடல்களுக்கான இசைக் குறிப்புகள் Key Board exersice, Theory, கேள்வி ஞானம் ஆகியன விற்பனைக்குண்டு.

**கரவீணா இசைமன்றம்**
131, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:0713055991,0777031293
(நல்லூர் ஆலயத்திலிருந்து 500 M தெற்கே)
(51227)

## 21 ஆண்டு கால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்

**கலாலயா** பயிற்சியகம்
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அருகில்)

மகளிருக்கான துரித 1மாத/3மாத பயிற்சிகள்

- கேக் ஐஸிங்: 25 வகையான கேக் வடிவங்களின் மேல் சகலவிதமான ஐஸிங் முறைகளும் செய்தல் மாச்சீனி மலர்கள் (SUGAR FLOWERS) செய்தல்.
- கூந்தல் அலங்காரம்:30 வகையான கொண்டைகள் போடுதல்.
- உணவு தயாரித்தல் :மேலைத்தேச, கீழைத்தேச மற்றும் சீன உணவுகள், சிற்றுண்டிகள் தயாரித்தல்.
- FABRIC PAINTING * மலர், மலர்ச்செண்டுகள் செய்தல் * கைவேலை
- அடிப்படை FACIAL அழகுக்கலையும் மணப்பெண் அலங்காரங்களும்
- அடிப்படைத் தையல் தெரிந்தவர்களுக்கான 3 விதமாக சாறிபிளவுஸ் (SAREE BLOUSE) வெட்டித்தைக்கும் முறை.

இத்துடன் புதிதாக தையல் பழக விரும்புவோருக்கான

- 6 மாத உடை தயாரித்தல் பயிற்சியும் ஆரம்பமாகின்றன.

கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் : 21-06-2006
சனி,ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் : 24-06-2006

☞ மேலும் விவரங்களை வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப.2.30 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம். (சி/49665)(21.16.14) பதிவாளர்

## சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலைப்பவுடர் விற்பனைக்குண்டு இது நீரிழிவு நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையும் உடஉணவுமாகும். குருதியில் குளுக்கோசையும் கொலஸ்ரோலையும் கட்டுப்படுத்தும் காரணியுடன் விற்றமின் A,C உடன் இரும்பு நாகம் குரோமியம், கல்சியம், நார்ப் பொருள்கள் போன்ற நன்மை பயக்கக்கூடிய பொருள்களும் உண்டு.

**BIO TEC INTERNATIONAL**
131/2, பலாலி வீதி, திருநெல்வேலி
(பாம் ஸ்கூல் அருகில்)
T.P. 021 4590907
32/5, ரெயில்வே அவனியூ, கொழும்பு-05
(51292) T.P. 0112 852269 (21.14.16)

## IBMS

புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | | |
|---|---|---|
| பிரிவு I | 18.06. 2006 | பகல் 10.00 மணி |
| பிரிவு II | 21.06. 2006 | |
| பிரிவு III | 02.07. 2006 | |
| பிரிவு IV | 10.07. 2006 | |

பதிவுக் கட்டணம் முற்றிலும் இலவசம்

**Diploma Courses**

Dip. in MS Office — Dip. in Desk Top Publishing
Dip. in Internet Technology — Dip. in Hardware Engineering
Computerized Accounting (Tally 7.2)

Head Office : # 209, Manipay Road, Vaitheeswara Junction, Jaffna.
Tel : 021 222 8232 Email : ibms_jaffna@rediff.com
Branches : • NMMV Road, Nelliady • Sangaththanai, Chavakachcheri

# மரண அறிவித்தல்

## அற்புதம் ஆனந்தநாயகம்



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அ.ஆனந்தநாயகம் அவர்கள் 16.06.2006 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி அற்புதம் தம்பதியரின் அன்பு மகனும் ஜெயவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற முத்துமணி, ஆசைத்துரை, திருமதி திரேஸ், திருமதி தங்கம், செல்வி மணி ஆகியோரின் அன்புச் சகோதர ரும், தர்மினி, தர்சினி, சியாமினி, கமலன், றஞ்சினி, ஆன் நிஷாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் அல்பிறட் சகாய ராஜன், டிலோஜன் ஆகியோரின் அன்பு மாமனும், றொக்சி, றேகா, சுலக்ஷனா, சரன், பிரித்திகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (18.06.2006) ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு இல. 51, 6ஆம் குறுக்குத்தெரு (பிலிப் ஞாபகார்த்த மருத்துவமனை அருகாமை) குருநகர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இருந்து பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
**பி.நியூட்டன்**
இல. 51, 6ஆம் குறுக்குத்தெரு,
குருநகர்,
யாழ்ப்பாணம்.
(51315)(21.16.14)

## திருமதி அம்பலவாணர் சின்னம்மா



காரைநகர், களபூமி, அழகாபுரியைப் பிறப்பிடமாகவும், செட்டியார்மடம், அராலி வடக்கு, வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட அம்பலவாணர் சின்னம்மா அவர்கள் 16.06.2006 இல் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர்- பொன்னு தம்பதியரின் புத்திரியும், காலஞ்சென்ற அம்பலவாணர் (சதானந்த வைத்திய சோதிடர் மலேசியா) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அன்னப்பிள்ளை, நாகமணி அவர்களின் அருமைச் சகோதரியும், நவரத்தினம், ஜெயரத்தினம், புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு தாயும், புஸ்பராணி, சுசிலா, கனகரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியும், நவரஞ்சன் (ஜேர்மனி), நவநீதன் (பிரான்ஸ்), ஜெயரமணி (பிரான்ஸ்), சுசிகரன், சுவர்ணன், சுரேந்தன், சுபாஸ்கரன், ரவீந்திரன் (ஜேர்மனி), அன்பழகன் (நியூஸ்லாண்ட்), ஆனந்தி, சுமன், மதுசனன், கம்சிகா (வவுனியா), ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், நிசேதன், நிருசா (ஜேர்மனி), நித்தியா, கஜன் (பிரான்ஸ்), நிஞானி, கயானா (இலங்கை), ரகின், ரணிக்கா, ரவியா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பூட்டியும் சிவனேஸ்வரி (ஆசிரியை- வவுனியா கோமாசன்குளம் மகாவித்தியாலயம்), மணிவண்ணன் ஆகியோரின் பெரியம்மாவும், மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரின் வதிவிடமாகிய செட்டியார் மடம், அராலி வடக்கில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
**ஏ.ஜெயரத்தினம்** (மகன்)
செட்டியார் மடம்,
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.
(51321)(21.16.14)

# சமுத்திர தீபம் தற்போது நயினாதீவில் தரிப்பு

குருநகர், ஜூன் 18

அனலைதீவு, நயினாதீவு ஆகிய இடங்களில் இருந்து அவசர நோயாளர்களை யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்படும் அம்புலன்ஸ் படகான் 'சமுத்திர தீபம்' தற்போது நயினாதீவு இறங்கு துறையில் கட்டப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இந்தப் படகு குறிகாட்டுவான் இறங்கு துறையில் கட்டப்பட்டிருந்தது. நெடுந்தீவிற்கான அம்புலன்ஸ் சேவைக்கென கியூ மெடிக்கா புதிய அம்புலன்ஸ் படகு ஒன்றை வழங்கியிருந்தது. இதனைத் தொடர்ந்து 'சமுத்திர தீபம்' நயினாதீவு, அனலைதீவு நோயாளர்களுக்கான அவசர சேவையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(51)

# வைத்தியர் நியமனம்

தென்மராட்சிகிழக்கு, ஜூன்18

வரணி மத்திய மருந்தகத்துக்கு புதிய மருத்துவர் ஒருவர் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நியமனம் யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கேதீஸ்வரனால் வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் ரீ.கே. நடராசா என்ற வைத்தியரே புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளவராவார்.

(122)

# இலவச ஆங்கில வகுப்பு

யாழ்ப்பாணம் ஜூன்18

பருத்தித்துறை சத்திய சாயி சமித்தியினர் பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கில அறிவினை வளர்க்கும் முகமாக இலவச ஆங்கில வகுப்பினை கடந்த வாரம் முதல் ஆரம்பித்துள்ளனர்.

ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்களால் சத்தியசாயி சமித்தி மண்டபத்தில் இவ் வகுப்புகள் நடைபெற்று வருவதாகவும் இவ் வகுப்புகளில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் உடன் தொடர்பு கொள்ளுமாறும் சமித்தி செயலாளர் எஸ்.ஏரம்பமூர்த்தி அறிவித்துள்ளார்.

இதேவேளை பாடசாலை மாணவர்களுக்கான கணித பாட இலவச வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இவ் வகுப்புகளில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறும் அவர் மேலும் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FIFA WORLD CUP GERMANY 2006

# 18 ஆவது உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டி

## சம்பியன்கள்

உலகக் கோப்பையை இதுவரை 11 நாடுகள் வென்றுள்ளன. இதில் நடப்பு சம்பியனான பிரேசில் அதிகபட்சமாக ஐந்துமுறை சம்பியன் பட்டம் வென்றுள்ளது. இதுவரை கோப்பை வென்ற அணிகள்:

| ஆண்டு | அணி |
|---|---|
| 1930 | உருகுவே |
| 1934 | இத்தாலி |
| 1938 | இத்தாலி |
| 1950 | உருகுவே |
| 1954 | மே.ஜேர்மனி |
| 1958 | பிரேஸில் |
| 1962 | பிரேஸில் |
| 1966 | இங்கிலாந்து |
| 1970 | பிரேஸில் |
| 1974 | மே.ஜேர்மனி |
| 1978 | ஆர்ஜென்ரீனா |
| 1982 | இத்தாலி |
| 1986 | ஆர்ஜென்ரீனா |
| 1990 | மே.ஜேர்மனி |
| 1994 | பிரேஸில் |
| 1998 | பிரான்ஸ் |
| 2002 | பிரேஸில் |

## ரசிகர்களை கோல் மழையில் நனைத்தது ஆர்ஜென்ரீனா

கால்பந்து ரசிகர்களை ஆர்ஜென்ரீனா கோல் மழையில் மூழ்கடித்தது. அருமையான ஆட்டத்தின் மூலம் 6 கோல் போட்டு வெற்றிபெற்றது. சேர்பியா மொன்டி நீக்ரோ ஒரு கோல் கூட அடிக்கமுடியாமல் தொடரில் இருந்து வெளியேறியது.

நேற்றுமுன்தினம் கெல்சன் கிர்ச்சனில் நடந்த 'சி' பிரிவு லீக் போட்டியில் இரண்டுமுறை சம்பியன் ஆர்ஜென்ரீனா அணி சேர்பியாவை சந்தித்தது. அசத்தலான 'பாஸ்' மூலம் ஆட்டத்தை ஆர்ஜென்ரீனா பிரமாதமாகத் தொடங்கியது. முதல் நிமிடத்தில் இந்த அணிக்கு மூலை உதை கிடைத்தது. இந்த வாய்ப்பு வீணான போதும், ஆட்டத்தின் 6ஆவது நிமிடத்தில் இடது புறத்திலிருந்து ஜுவான் பாப்லோ சோரின் கொடுத்த பந்தைப் பெற்ற சேவியர் சவியாலோ, அதை மேக்சி ரோட்ரிக்சுக்கு கொடுத்தார் அதை அப்படியே கோல் கம்பத்திற்குள் ரோட்ரிக்ஸ் நுழைக்க ஆர்ஜென்ரீனா முதல் கோல் அடித்தது.

ஆட்டத்தின் 31ஆவது நிமிடத்தில் இன்னொரு தாக்குதல் இம்முறை சேவியர் செவியாலோ பந்தைக் கொடுக்க அதைப் பெற்ற ஜுவான் ரோமன் ரிக்கில்ம், எஸ்டிபன் காம்பியாசோவுக்கு கொடுத்தார். காம்பியோசா 12 மீற்றர் தூரத்தில் இருந்து கோல் அடிக்க, ஆர்ஜென்ரீனா 2-0 என்ற முன்னிலை பெற்றது. 41ஆவது நிமிடத்தில் சேவியர் செவியாலோ கொடுத்த பாஸைப் பெற்ற மேக்ஸி ரோட்ரிக்ஸ் தனது இரண்டாவது கோலை அடிக்க, ஆர்ஜென்ரீனா முதல் பாதியில் 3-0 என்ற மகத்தான முன்னிலை பெற்றது.

இரண்டாது பாதியிலும் ஆர்ஜென்ரீனா கோல் மழை பொழிந்தது. சேர்பியா அணிக்கு 64ஆவது நிமிடத்தில் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. ஆர்ஜென்ரீனாவின் சேவியர் மாஸ்செரோனவை



முரட் டுத்தனமாகத் தடுத்த, மடேஜா் கேஸ்மென் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். ஏற்கனவே திணறிய சேர்பியா 10பேராக குறைய, ஆர்ஜென்ரரீனா அடுத்தடுத்து கோல் அடித்து அசத்தியது. ஆட்டத்தில் 78ஆவது நிமிடத்தில் கிடைத்த தடையற்ற உதை வாய்ப்பில் ஆர்ஜென்ரீனாவின் ஜுவான் ரோமன் ரிகில்ம் அடிக்க, அதைப் பெற்ற லியோனல் மெசி, ஹர்னான் கிரேஸ் போவுக்கு பரிமாறினார். அதை கிரஸ்போ அருமையான கோலாக மாற்ற ஆர்ஜென்ரீனா 4-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. 84ஆவது நிமிடத்தில் கார்லஸ் டெவேஸ் தனி ஆளாகச் சென்று ஆர்ஜென்ரீனாவின் 5ஆவது கோலை அடித்தார். 88ஆவது நிமிடத்தில் லயோனல் மெசி ஒரு கோல் அடிக்க ஆர்ஜென்ரீனா அணி 6-0 என்ற கோல் கணக்கில் வென்றது. இதுவே இத்தொடரில் மிகப்பெரிய வெற்றியாக அமைந்தது.


இதன்மூலம் இரண்டாம் சுற்றுக்கு ஆர்ஜென்ரீனா முன்னேறுவது உறுதியானது. தொடர்ந்து இரண்டு தோல்விகளைச் சந்தித்த சேர்பியா தொடரில் இருந்து வெளியேறுகிறது.

## திணறியது மெக்சிக்கோ அசத்தியது அங்கோலா

ஹனோவர், ஜூன் 18

அருமையாக ஆடியதன் மூலம் ஆபிரிக்காவின் அறிமுக அங்கோலா, அனுபவ மெக்சிக்கோவுக்கு அதிர்ச்சி கொடுத்தது. போட்டி கோல் எதுவும்போடாமல் சமனிலையில் முடிய, இரு அணிகளும் தலா ஒருபுள்ளி பெற்றன. இதன் மூலம் 10 பேராக விளையாடிய அங்கோலா உலககோப்பை வரலாற்றில் முதல் தடவை ஒரு புள்ளியைப் பதிவு செய்து மகிழ்ந்தது.

நேற்றுமுன்தினம் நடந்த 'டி' பிரிவு லீக் போட்டியில் மெக்சிக்கோ, அங்கோலா அணிகள் மோதின. ஈரானை வென்ற மகிழ்ச்சியில் மெக்சிக்கோ களமிறங்கியது. ஏற்கனவே போர்த்துக்கல்லிடம் தோற்ற அங்கோலா கட்டாய வெற்றியை எதிர் நோக்கி களம் புகுந்தது. முதல் பாதியில் மெக்சிக்கோ முழு மையாக ஆதிக்கம் செலுத்தியது. ஆட்டத்தின் 13ஆவது நிமிடத்தில் மார்க்கஸ், கோல் கம்பத்துக்கு வெளியேஅடித்துஏமாற்றினார். 45ஆவது நிமிடத்தில் மெக்சிக்கோவின் கிலர்மோ பிரான்கோ அசுரவேகத்தில் அடித்த பந்தை, அங்கோலா கோல் காப்பாளர் ஜாவ்ரிக்கார்டோதுடிப்பாக்தடுத்துவிட்டார். முதல் பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை.



இரண்டாவது பாதியில் மெக்சிக்கோ வீரர் கள், எதிணியின் 'பெனால்டி' பகுதியில் தான் விளையாடினர். மூலை உதை தடையற்ற வாய்ப்புகளைப் பெற்ற போதும் கோல் அடிக்க முடியவில்லை. அங்கோலா கோல் காப்பாளர் ஜாவ் ரிக்கார்டோ மெக்சிக்கோவின் அத்தனை வாய்ப்புகளையும் தடுத்து அசத்தினார். 78 ஆவது நிமிடத்தில் பந்தை கையால் தடுத்த அங்கோலாவின் ஆன்ட்ரி மாங்கா, சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட, அங்கோலா 10 பேருடன் விளையாடியது. இந்த வாய்ப்பையும் மெக்சிக்கோ பயன்படுத்திக் கொள்ளத் தவறிய தால் போட்டி சமநிலையில் முடிந்தது. இரு அணிக ளும் தலா ஒரு புள்ளி பெற்றன.

## இன்றைய ஆட்டங்கள்

பிரிவு 'எப்' - பிரேஸில் - ஆஸ்திரேலியா மாலை 7மணி
பிரிவு 'எப்' - ஜப்பான் - குரோசியா இரவு 10 மணி
பிரிவு 'ஜி' - பிரான்ஸ்- கொரியா அதிகாலை ஒரு மணி

## சீன ஜோதிடர்களின் எதிர்பார்ப்பு இது

இத்தாலி அல்லது பிரேசிலுக்குத்தான் கோப்பை என்று சீன ஜோதிடர்கள் கூறுகின்றனர். தற்போது சீனாவில் நாய் ஆண்டு நடைபெறுவதால் அது இவ்விருநாடுகளுக்கும் தான் சாதகம் என்றும் அவர்கள் கூறுகிறார் கள்.

நான்கு ஆண்டுக்கு ஒரு முறை நடக்கும் உலக கோப்பை போட்டிகள் நாய், குதிரை அல்லது புலி ஆண்டுகளில்தான் நடைபெற்றாகவேண்டும். இதற்கு முந்தைய நாய் ஆண்டுகளில் நடைபெற்ற உலக கோப்பைகளில் இத்தாலி அல்லது பிரேசில் அணிகள்தான் வெற்றிபெற்றுள்ளன. 12பெயர்களைக் கொண்ட 12 ஆண்டுகளில் வேறு எந்த ஆண்டுகளை விடவும், நாய் ஆண்டில் இவ்விரு அணிகளில் ஏதாவது ஒன்றுதான் கோப்பையைப் பெற்றுள்ளன.

எனவே, இம்முறையும் இவ்விரு அணி களில் [illegible] ஜோதி [illegible]

## இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியது நெதர்லாந்து

ஸ்டட்கார்ட், ஜூன்18

நெதர்லாந்து அணி ஐவரி கோஸ்டை 2-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியது. ஆபிரிக்காவின் ஐவரிகோஸ்ட் தொடரில் இருந்து வெளியேறியது.

நேற்றுமுன்தினம் ஸ்டட்கார்ட்டில் நடந்த 'சி' பிரிவு லீக் போட்டியில் நெதர்லாந்துக்கு தடையற்ற வாய்ப்பு கிடைத்தது. இந்த வாய்ப்பில் ராபின் வோன் பெர்சி அருமையான கோல் அடிக்க, நெதர்லாந்து 1-0 என்ற முன்னிலை பெற்றது.

ஆட்டத்தின் 27ஆவது நிமிடத்தில் நெதர்லாந்தின் நட்சத்திர வீரரான ராட்வான் நிஸ்டல்ரூய், ஐவரி கோஸ்ட் தற்காப்பை தகர்த்து அருமையான கோல் அடித்தார். இதற்கு பிறகு ஐவரி கோஸ்ட் கடுமையாக போராடியது. 32ஆவது நிமிடத்தில் இந்த அணியின் திடியர் ஜோகாரா 25 மீற்றர் தூரத்தில் இருந்து அடித்த பந்து கோல் கம்பத்தில் பட்டுப் பறக்க, வாய்ப்பு வீணானது. 38ஆவது நிமிடத்தில் ஐவரி கோஸ்ட் பதிலடி கொடுத்தது. இந்த அணியின் பகாரி கோன் பிரமாதமான கோல் அடித்து அசத்தினார்.

முதல் பாதி முடிவில் நெதர்லாந்து 2-1 என்ற முன்னிலை பெற்றிருந்தது. இரண்டாவது பாதியில் ஐவரி கோஸ்ட் தாக்குதல் ஆட்டத்தைக் கையாண்டது. 55ஆவது நிமிடத்தில் அப்துல்யா மெய்ட் அடித்த பந்து, நெதர்லாந்து கோல்காப்பாளர் எட்வின் வான் டர்சர் கையில் தஞ்சம் புகுந்தது. இதற்குப் பிறகு நெதர்லாந்து வீரர்கள் நிறைய முயற்சிசெய்தனர். ஆனால், மேலும் கோல் எதுவும் போட முடியவில்லை. இறுதியில் நெதர்லாந்து அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெறும் இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# G.C.E. (A/L) இன் பின்னர்



வெளிநாட்டில் உயர்கல்வியை தொடர்வதற்கு அல்லது உடனடித் தொழில் வாய்ப்பொன்றிற்கு...

## FOUNDATION DEGREE PROGRAMME

- UK. Canada போன்ற நாடுகளில் உயர்கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்கள் இப்பாடநெறியைப் பயில்வதன் மூலம் எந்தவித தடைகளுமின்றி வெளிநாட்டு உயர்கல்விக்கான STUDENT VISA க்களை பெற்றுக் கொள்கின்றனர்
- இக்கற்கை நெறியின் மூலம், நவீன தொழிற் சந்தையில் எந்தத்துறை சார்ந்த தொழில் வாய்ப்புகளுக்கும் தகைமை கொண்டோராக உங்களை மாற்றிக் கொள்ளமுடியும்.
- பிரித்தானியாவின் முன்னணி கல்வி நிறுவனங்களின் நேரடி அங்கீகாரமும், சான்றிதழ்களும் இப்பாடநெறிக்கு வழங்கப்படுவதால் உங்கள் உயர்கல்வி அல்லது உடனடித் தொழில் வாய்ப்பிற்கான வாய்ப்புகள் இலகுவாய் அமைகின்றன.

**கற்கை நெறியின் கட்டமைப்பு**

G.C.E. (O/L) or G.C.E. (A/L) → Foundation Degree 3 Months → Bsc/BA Degree UK-Canada

கற்கை நெறிமுடிவில் சர்வதேச அங்கீகாரம் கொண்ட 6 சான்றிதழ்கள்

**பாடப்பரப்பு**

- தகவல் தொழில்நுட்பமும் கணனிப் பிரயோகமும்
- ஆங்கில மொழிப்பயிற்சி
- ஆளுமை மற்றும் திறன் விருத்தி



குறிப்பு: இக்கற்கை நெறி நிறைவில் வெளிநாடுகளில் (UK. Canada) உயர்கல்வியைத் தொடரவிரும்பும் மாணவர்களுக்கு அதற்கான STUDENT VISA க்களை பெறுவதற்கான பூரண வழிகாட்டுதல்களும் LONDON INSTITUTE இனால் வழங்கப்படும்.

GoodWIN Ads

LIFE LONDON INSTITUTE OF FURTHER EDUCATION

25 A, Hospital Road, Dehiwala. Tel : 011 5518666, 0777 715788

# Request for Quotations – Procurement of Civil Works (TP/2006/03)

UNDP

United Nations Development Programme, Sri Lanka invites Request for Quotations (RFQ) for the following civil works projects in **Batticaloa, Mullaitivu, Kilinochchi and Jaffna**. The documents can be collected from the locations given against each action from **June 20, 2006.**

| Lot Number | Description of work | Minimum ICTAD level required | Contact Location |
|---|---|---|---|
| BAT/43505/05 | Construction of 1.5 km Bitumen surfaced Road at Palamunai in Batticaloa | M6 | UNDP, Station Cross Street, Batticaloa |
| MUL/39885/43 | Reconstruction of a Public Market at Valluvarpuram in Puthukudiyiruppu, Mullaitivu | M7 | UNDP, 07, Kumarasamy Road, Ganeshapuram, Kilinochchi |
| MUL/47437/02 | Construction of Two Agro Wells at Navatkadu in Maratimepattu, Mullaitivu | M8 | UNDP, 07, Kumarasamy Road, Ganeshapuram, Kilinochchi |
| KIL/39885/26 | Construction of 70' X 25' School building at Kaddaikkadu in Kilinochchi | M8 | UNDP, 07, Kumarasamy Road, Ganeshapuram, Kilinochchi |
| KIL/39885/27 | Renovation of 2.2 km internal road in Nagapaduvan, Kilinochchi | M8 | UNDP, 07, Kumarasamy Road, Ganeshapuram, Kilinochchi |
| KIL/39885/29 | Renovation of 1.5 km Internal Road at Arasarkerney, Kilinochchi | M9 | UNDP, 07, Kumarasamy Road, Ganeshapuram, Kilinochchi |
| KIL/39885/30 | Renovation of 2.5 km Agriculture road in Uduppattukkandal, Kilinochchi | M7 | UNDP, 07, Kumarasamy Road, Ganeshapuram, Kilinochchi |
| KIL/39885/31 | Reconstruction of a Community Hall with Library at Janthinagar in Kilinochchi | M8 | UNDP, 07, Kumarasamy Road, Ganeshapuram, Kilinochchi |
| JAF/39885/27 | Reconstruction of 1.2 km internal roads in Alvai North, Jaffna | M7 | UNDP, 121A, Temple Road, Jaffna |
| JAF/39885/28 | Reconstruction of fisheries landing site at Kakkaitivu, Jaffna | M9 | UNDP, 121A, Temple Road, Jaffna |
| JAF/39885/31 | Construction of internal roads with culverts and drainages in Kakkaitivu, Jaffna | M9 | UNDP, 121A, Temple Road, Jaffna |
| JAF/39885/32 | Construction of a Community Centre in Alvai North, Jaffna | M8 | UNDP, 121A, Temple Road, Jaffna |
| JAF/39885/34 | Construction of Multipurpose Cooperative sale centre at Alvai North in Jaffna | M8 | UNDP, 121A, Temple Road, Jaffna |
| JAF/39885/35 | Reconstruction of a causeway with three row culvert in Chedipulam, Velanai, Jaffna | M9 | UNDP, 121A, Temple Road, Jaffna |
| JAF/39885/36 | Construction of a Multi Purpose Hall in Karainagar, Jaffna | M8 | UNDP, 121A, Temple Road, Jaffna |
| JAF/39885/37 | Construction of a Multi Purpose Hall in Araly Centre, Jaffna | M8 | UNDP, 121A, Temple Road, Jaffna |
| JAF/39885/39 | Reconstruction of paddy storage in Chavachcheri, Jaffna | M9 | UNDP, 121A, Temple Road, Jaffna |
| JAF/39885/41 | Renovation of Farming infrastructures at DATC in Thirunelveli, Jaffna | M8 | UNDP, 121A, Temple Road, Jaffna |
| JAF/39885/42 | Construction of a Auction Centre in Araly South, Jaffna | M9 | UNDP, 121A, Temple Road, Jaffna |

Documents to be presented for obtaining RFQ documents:

- Request letter for document on the Company's business letterhead
- Certificate of ICTAD registration

Completed documents will be accepted at the same locations from where the documents are distributed until **5 p.m. on June 30, 2006.** Documents can also be obtained from and submitted to Infrastructure Analyst, UNDP Transition Programme, 12, Bagatalle Road, Colombo 03.

and/or reject any quotations, without assigning any reasons.

(C/49704)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25ஆம் ஆண்டு நினைவு கூருதல்



அமரர்
**சிதம்பரப்பிள்ளை மாசிலாமணி**

மலர்வு 04-02-1918 உதிர்வு 27-05-1981

திதி: 18.06.2006

எங்கள் வாழ்வின் ஆதாரமாய் நின்று
எம் உயர்விற்கு நல்வழிகாட்டி
ஏற்றமுடன் வாழவைத்த உத்தமரை
நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள் *மற்றும்*
'பகவதி வாசம்' அன்பு மருமக்கள்.

*அரியாலை.* (51220)(32-19-16)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

ஜேசேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
**(Best one Communication)**
வெஸ்ற் வன் கொமினிக்கேஷன்,
மானிப்பாய் றோட், ஆனைக்கோட்டைச் சந்தி,
ஆனைக்கோட்டை.
T.P.: 021 222 5728, 077 6062742

(51077 19-16)

## பல வேலைக்கு ஒருவர் தேவை

*கோயில் வேலையும் பல வேலையும் செய்யக்கூடிய குடிப்பழக்கம் அற்ற ஒருவர் தேவை. 40 வயது முதல் 55 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் நலம். சம்பளம் நேரில் பேசிக்கொள்ளலாம். செவ்வாய்க் கிழமை தவிர்ந்த மற்றைய நாள்களில் சந்திக்கவும்.*

தர்மகர்த்தா,
துர்க்காதேவி தேவஸ்தானம்,
(51173)(26.19.14) சாவகச்சேரி.

## கண்ணீர் அஞ்சலி

எமது தேசிய நீர் வழங்கல்
வடிகாலமைப்புச் சபையில்
கடமைபுரிந்த
அமரர்
**கணபதி சின்னத்தம்பி**
அவர்கள் 24.05.2006 அன்று
சிவபதமடைந்த செய்தியைக் கேட்டு
ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை,
வடபிராந்திய தொழிற்சங்கம்,
யாழ்ப்பாணம். (51283)(32-19-16)

## *Fast Track @ AIMS*

**1. Microsoft Office-2003**
- Introducation to Windows Xp
- Word
- Excel
- Access
- Assignment
- Power Point Presentation

15 Days Only

**2. Computer Hardware**
- Introducation to Hardware
- Identification of Parts
- Assembling & Installation
- Setup & Configeration
- O/S & Software Installation
- Trouble shooting Techniques

Starts on Batch -I 18.06.2006 Batch -II 21.06.2006

**3. Graphic Designing & Publishing**
- Introducation to DTP
- PageMaker
- Photoshop
- CorelDraw & publishing Techniques
- Project work

காலை 9.00 மணி

AIMS
மேலதிக விபரங்களுக்கு,
இயக்குனர்,
#118 பலாலிவீதி, திருநெல்வேலி
(தபால்பெட்டி சந்தி அருகில்)
ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES
Center for FOSS & LAMP

# ஈழத்தமிழர் ஆதரவு நிலைப்பாட்டை இந்திய அரசு உடனே எடுத்திடவேண்டும்

ஈழத்தமிழருக்கு ஆதரவான நிலைப்பாட்டை இந்திய அரசு எடுக்கவேண்டும். இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் தமிழகத்தின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிப் பொதுச்செயலாளர் தொல் திருமாவளவன்.

ஈழத்தமிழர் நிலைமையை அறிவதற்காக இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவை அனுப்பவேண்டும் என்று வலியுறுத்தி தமிழகத்தில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டில் 80 அமைப்புகள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டங்களை நடத்தின.

சென்னையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே தொல் திருமாவளவன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கைக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை அனுப்பவேண்டும். ஈழத்தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்குள்ள நிலைமையை இந்தியத் தலைவர்களிடத்தில் விளக்குவதற்கு அனுமதிக்கவேண்டும். கடந்த சில மாதங்களாக மூவாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ்ச் சொந்தங்கள் தமிழகத்துக்கு வந்திருப்பதன் மூலம் ஈழத்திலே வன்முறைகள் எந்த அளவுக்கு நடந்திருக்கின்றன என்பதை அறியலாம்.

1983ஆம் ஆண்டு நடைபெற்ற இனப்படுகொலையின் போது அணிதிரண்டு தாய்த் தமிழகத்தை நோக்கி கதறி அழுதவாறு வந்தது போல் இரண்டு மூன்று மாதங்களில் ஈழத் தமிழ்ச் சொந்தங்கள் வந்துள்ளனர்.

சிங்களப் பேரினவாத அரசுக்கு இந்திய அரசு மறைமுகமாக பல்வேறு உதவிகளை வழங்குகிறது. தமிழ்நாட்டுத் தமிழர்களின் உணர்வுகளுக்கு எதிராக-ஈழத்தமிழர்களுக்கு எதிராக- சிங்களப் பேரினவாதத்திற்கு ஆதரவாக- உறுதுணையாக இந்திய அரசு செயற்பட்டுவருகிறது. இந்தப் போக்குகள் கைவிடப்பட்டு தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும். தமிழக முதல்வர் கருணாநிதி ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து கூறுகிறபோது ''இந்திய அரசின் நிலைப்பாடு தான் எங்கள் நிலைப்பாடு'' என்று கூறியுள்ளார். இந்திய அரசின் நிலைப்பாடு என்ன? சிங்கள அரசுக்கு ராடர் கருவி கொடுப்பது, பலாலி விமானத்தளத்தை சீர்படுத்தித்தருவது, சிங்களப் பேரினவாதத்திற்கு உறுதுணையாக இருப்பது, ரணில் விக்கிரமசிங்க வந்தாலும் -ராஜபக்ஷ வந்தாலும் சந்திரிகா வந்தாலும் அவர்களுக்கு சிவப்புக் கம்பளம் விரிப்பது ஆகியவைதான் இந்திய அரசின் நிலைப்பாடு.

## பொங்கி எழுந்த தமிழகம்

தமிழக முதல்வர் இந்த நிலைப்பாடுதான் தனது நிலைப்பாடா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். எமது சட்டப் பேரவை உறுப்பினர்கள் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி சட்டப்பேரவையிலே தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். ஆனால் முதல்வர் தனது பதில் உரையில் இதுபற்றி குறிப் பிடவில்லை.

கடந்த ஆட்சிக்காலத்தில் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனை கைதுசெய்ய வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டபோது பேரவையிலிருந்து விடுதலைச் சிறுத்தைகள் வெளிநடப்புச் செய்தது. ஆனால் தி.மு.கவோ ஆதரிக்கவும் இல்லை எதிர்க்கவும் இல்லை என்ற நிலைப்பாட்டில் இருந்தது.

அகதிகளுக்கான ஐ.நா.ஆவணத்தில் இந்திய அரசு இதுவரை கையெழுத்திடவில்லை. தமிழ் நாட்டின் 13 அமைச்சர்கள் மத்தியிலே உள்ளனர். அவர்களின் அமைச்சுப் பொறுப்புகளுக்கு நெருக்கடி கொடுக்கிற தமிழக முதல்வர், ஈழத் தமிழர்களுக்காக ஏன் அதைச் செய்யக்கூடாது? - என்றார் திருமாவளவன்.

ஆர்ப்பாட்ட நிகழ்வில் பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை க.இராசேந்திரன் பேசியதாவது:- ஈழத்தமிழரைப் பாதுகாக்கிற-தன்னுடைய கடமையை ஆற்ற தமிழ்நாடு இன்று கிளர்ந்து எழுந்துள்ளது. கடந்த இரு மாதங்களில் மட்டுமே 200 இற்கும் மேற்பட்ட அப்பாவி தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் மிகக்கொடூரமாகப் பெண்களும் குழந்தைகளும் கொல்லப்பட்டுள்ளனர். இணையத் தளங்களிலே வெளியாகியுள்ள அந்தப் படங்களை பார்க்கவே முடியவில்லை. அந்த அளவுக்கு மிகக்கொடூரமாகக் கோரமாகக் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் இணையத்தளங்களிலே அந்தப் படங்கள் வெளியாகி உள்ள போதும்கூட இங்கே இந்தியாவில் உள்ள ஊடகங்கள் அவற்றை இருட்டடிப்புச் செய்துவிட்டன. இலங்கைப் பிரச்சினையில் இந்திய அரசு ஒரு சார்பாக நிலைப்பாடு எடுத்துவிட முடியாது. உண்மை நிலையை அறிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கு அனுப்பவேண்டும். ஈழத் தமிழர்களுக்கு உதவாமல் சிங்கள அரசை இந்திய அரசாங்கம் ஆதரிப்பது என்பது இந்தியக் கட்டமைப்பின் குடிமக்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு தேசிய இனமாக வாழ்கின்ற இந்தத் தமிழர்களின் உணர்வுகளை அவமதிப்பதாகும். ஈழத்தமிழர்களின் விடுதலைப்போராட்டமானது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட போராட்டம்.

தமிழகத்தில் உள்ள தமிழர்கள் கட்சிகளை - இயக்கங்களை கடந்து இன்று உங்களுக்காக இணைந்து நிற்கிறோம் என்றார் விடுதலை இராசேந்திரன்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் மல்லை சத்யா பேசியதாவது:-

ஈழத்தமிழர்கள் நாதியற்றவர்கள் அல்ல என்பதற்காக தமிழர் நலன் காப்பதற்காக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகிறது. ஆர்ப்பாட்டத்தின் மூலமாக இந்திய மற்றும் தமிழக அரசாங்கங்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. ஈழத்தமிழர்களை மாற்றாந் தாய் மனப்பான்மையோடு கருதாமல் எங்கள் தொப்புள் கொடி உறவுக்குச் சொந்தக்காரர்கள் என்பதை மனதில்கொண்டு இந்திய அரசாங்கம் செயற்படவேண்டும். அவர்களுக்கு இழப்பு ஏற்பட்டால் தாய்த் தமிழகத்தினர் பொறுத்துக்கொள்ளமாட்டார்கள். தமிழர்கள் 60 நாடுகளுக்கும் மேற்பட்ட இடங்களில் வாழ்கின்றனர். 2 நாடுகளில் தான்- தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் தான் தேசிய இனமாக உள்ளனர். எமது தேசிய இனத்துக்கு ஆபத்து ஏற்படுகிற போது தட்டிக் கேட்டால் ஊறுவரும் என்று இந்திய அரசு கருதுகிறது.

சிங்கள அதிபர் மகிந்த ராஜபக்ஷவை சந்திப்பதைக் காட்டிலும் தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களை இந்தியப் பிரதமர் சந்திக்கவேண்டும். ஈழத்தமிழர் பிரச்சினையில் தமிழ் நாட்டில் நடந்துகொண்டிருக்கிற அரசாங்கம் தொட்டும் தொடாமலும் பட்டும்படாமலும் இருப்பது வேதனையான செய்தி - என்றார் மல்லை சத்தியா.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழ் நாடு அன்னையர் முன்னணியின் தலைவர் பேராசிரியர் சரஸ்வதி உள்ளிட்ட பல்வேறு தமிழ் அமைப்பின் பிரதிநிதிகளும் தமிழின உணர்வாளர்களும் பொதுமக்களும் பங்கேற்றனர்.

---

# நீ செய்த நாடகமே!

''முதுமை என்பது மரணத்தைக் காத்திருத்தல் அல்ல. அது மனிதத்தின் பொற்காலம்.''

நம்மிடையே வாழ்ந்துகொண்டிருக்கும் முதியவர்களுக் கும் குறிப்பாக முதுமையை ஏளனம் செய்தபடியே முதியவர்களாகிக் கொண்டிருக்கும் இளையோருக்கும் ஒரு செய்தியை விட்டுச் சென்றிருக்கின்றது குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'நீ செய்த நாடகமே' என்ற நாடகம்.

1985ஆம் ஆண்டில் எழுதப்பட்டாலும் கடந்த 11ஆம் திகதிதான் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் முதன்முறையாக மேடையேறியது இந்நாடகம். குழந்தை ம.சண்முகலிங்கத்தின் எழுத்துரு நெறியாழ்கையில் உருவான இதனை செயல் திறன் அரங்க இயக்கம் தயாரித்திருந்தது. அதன் நடிகர்களே பாத்திரமுமேற்றிருந்தனர்.

எம்மத்தியில் கவனிக்கப்படாமல் இருக்கும் முதியவர்கள் குறித்து சமூகத்தின் ஆன் மாவை உலுப்பும் ஒரு அற்புதமான படைப்பு இது.

''வீட்டிற்கு வீடு முதுநிலை நூலகங்கள், மூத்த புத்தகங்கள் எத்தனை எத்தனை கவனிப்பாரற்று தூசு படிந்து செல்லரித்துக் கிடக்கின்றன. அவற்றைத் தொல்லை தீர்ந்ததென்று கொள்ளிசெருகி தீக்கடன் புரிகின்றோம்.'' எத்தனை கனதியான கவிவரிகள் இவை. ஆம்! முதுமை என்பதை இன்று நாம் பெரும் சுமையாகவே கருதுகின்றோம். முதுமையை எள்ளி நகைக்கின்றோம். இதனால், நொந்து போய் கிடக்கும் முதியவர்கள் அவர்களின் வாழ்வில் எழும் பிரச்சினைகள் என்பனதான் இந்நாடகத்தின் கரு.

''தாமே தமக்குச் சுற்றமும் தாமே தமக்கு விதிவகையும்...'' எனும் திருவாசகம், பொழுது புலர்வதைக் குறிக்கும் வகையில் ஆரபி இராகத்தில் இசைக்கப்பட்டதைத் தொடர்ந்து வாழ் நாளில் ஒரு நாளில் நடைபெறும் சம்பவங்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டன.

ஒரு மணி 20 நிமிடங்களுக்கு யதார்த்தப் பண்புடன் கதை நகர்ந்து செல்கிறது. குறுக்கு வேலிச் சட்டம் மேடையைப் பிரித்து நிற்கின்றது. முதியவர்களுக்கும் ஏனையோருக்கும் இடையே அதுதானே இன்று பிரித்துக் கிடக்கின்றது. வேலிச் சட்டத்திற்கு பின்புறத்தே உற்சாகமான கலகலப்பான குடும்பம். முன்புறத்தே வயோதிபர்களின் கூட்டம்.

கைதடி முதியோர் இல்லம்; மேடையின் முன்புற விளிம்புகளில், சோகத்தை மட்டுமே தேக்கி வைத்தபடி அந்தகாரத்திற்குள் எதையோ தேடும் அந்தப் பிதாமகர்கள் இருக்கும் இடம் அதுதான். இதற்கு அப்பால் மேடையின் பின்புறம் மூன்று வெவ்வேறு குடும்பங்களும் அவர்களின் ஒருநாள் பொழுதில் முதுமைக்குக் கிடைக்கும் இடங்களும் எடுத்துக்காட்டப்பட்டன.

இதில் மரகதம் குடும்பம் மிகவும் வறுமையானது. இளமையிலே தன் கணவனைப் கொடுத்த மரகதம் 1983 இனக்கலவரத்துடன் தன் ஒரே மகனையும் பறிகொடுத்து இன்று மருமகளுடனும் பேர்த்தியுடனும் வாழ்ந்து வருகிறார். மருமகளும் பேர்த்தியும் மரகதத்தை படுத்தும் பாடுகள் சொல்லில் அடங்காதவை. வீட்டின் முன்பகுதிக்கு வரவிடாது வீட்டின் பின்புறம் அவளுக்கென்று இடம் ஒன்றினை ஒதுக்கியதுடன்



உறவினர்களுடன் கூட தன் மனப் பாரங்களை சொல்வதற்கும் விடாத கொடுமை. மரகதத்தின் மனநிலை மிக அற்புதமாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

அடுத்து பப்பாவுடன் வாழ்ந்து அனுபவித்து, அவரது நினைவுகளை மட்டுமே சுமந்து கொண்டு வாழும் ''மம்மி'' கதாபாத்திரம். நகைச்சுவையுடன் அமைந்திருப்பினும் அங்கும் முதுமை தன் துணையை இழந்து தவிக்கும் தவிப்புகள் மனக்கண்முன் வந்து நிற்கின்றது. எழுபது வயதாகியும் தன்னை ''ஆச்சி'' என்று அழைப்பதை விரும்பாத மம்மி பாத்திரம், ''பப்பா என்னை மம்மி என்டுதான் கூப்பிடுகிறவர். ஊரார்களும் என்னை மம்மி எண்டுதான் கூப்பிடுவினம்... மம்மி வீடு எண்டாத்தான் ஆருக்கும் தெரியும்.'' எனத் தன்னை அறிமுகம் செய்து வைக்கிறது. அங்கு மம்மிக்கும் தங்கியிருந்து படிக்கும் இளமையின் குறும்புத்தனமுடைய ராஜன் என்னும் பையனுக்குமான உரையாடல்கள் மிகவும் நகைச்சுவையுடன் வாழ்வில் துணையைப் பறிகொடுத்த ஒரு பெண்ணின் சோகத்துடன் கோர்க்கப்பட்டுள்ளது.

கலையின் உச்சக்கட்டமாக இவ்விரண்டு குடும்பங்களில் இருந்தும் முற்றிலும் வேறுபட்ட கனகசபை குடும்பம் மேடையின் மையப்புறத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு கனகசபை குடும்பம் சதாசிவம் குடும்பம் என்பன ஒரு கூட்டுக்குடும்பமாக வாழ்வை நகர்த்திக்கொண்டிருக்கின்றன. அங்கு முதுமைக்கு மதிப்பளிக்கப்படுகின்றது. அது உதாரணமாகின்றது.

ஒவ்வொரு குடும்பமும் முதுமையினை மதிக்கவேண்டும்; மதிப்பளிக்கவேண்டும் என்பதனை ஆணித்தரமாக வெளிப்படுத்தும் நோக்கிலோ என்னவோ இக்காட்சியானது மேடையின் நடுப்பகுதியில் முதன்மைப் படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.



அவர்கள் பேரன், பேர்த்திகளுடன் வாழும் சுகம் ஒரு தனித்தன்மையானது என்பது எடுத்துக்காட்டப்பட்டிருந்தது.

இவை எல்லாவற்றுக்கும் மாறாக வீட்டில் இருக்கும் முதியவர்களை ஒரு சுமை எனக் கருதி அவர்களுக்கு இழைக்கப்பட்ட துன்பங்களால் கைதடி முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியவர்கள், அவர்களின் மனநிலை மிகவும் வேதனைக்குரியவை. ஒவ்வொரு முதியவருக்குப் பின்னாலும் ஒவ்வொரு வரலாறு.

''எனக்கு எழுபத்தஞ்சாகுது என்னோடொத்த வயதுக்காரர் உறவிலும் சினேகிதத்திலும் போய்ச் சேர்ந்திட்டாங்கள். நான் ஒருத்தன்தான் காத்துக்கிடக்கிறன்...!'' என்ற வரிகளும் ''மண்டகப்படி வைத்து மரணத்தைக் காத்துக்கிடக்கின்ற மனிசர் நாங்கள்.'' என்ற வரிகளும் முதியோர் இல்லத்து பிதாமகர்களின் சோகம் சொல்லின.

மரணத்தை நோக்கிக் காத்திருப்பதென்றால் அவர்கள் எத்தனை எத்தனை வேதனையை அனுபவித்திருப்பார்கள்? இந்த உலகத்தை எவ்வளவு தூரம் வெறுத்திருப்பார்கள்? அவர்களுக்கு ஏன் அந்த நிலை வந்தது?

விசாலாட்சிப் பாத்திரம் மிகவும் மனதளவில் நொந்துபோன நோய்வாய்ப்பட்ட பாத்திரமாக சித்தரிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகப் பிள்ளைகள் வந்ததும் தனது பேர்த்தி என எண்ணி உரையாடுவதும் பின்னர் பேர்த்தி அல்ல எனத் தெரிந்து கொண்டதும் தன்னைச் சுதா கரித்துக் கொள்வதும் மிகவும் அற்புதமானது. ''பிள்ளைகள் பார்க்க மறுத்தவையால் பேரப்பிள்ளைகளிண்ட அட்டூழியம் தாங்க முடியல்ல... பிள்ளையளே மதிக்காத இடத்தில் ஊர் மதிக்கிறதே...'' என்ற வரிகள் பார்வையாளர் ஒவ்வொருவர் மனதிலும் வேல் பாய்ச்சியது போன்ற உணர்வினை ஏற்படுத்தியது. இத்தனைக்குப் பிறகும் தன் பேர்த்தி வந்து தன்னைப் பார்ப்பாள் என்று ஏங்கிக் கிடக்கிறாள் விசாலாட்சி.

விசாலாட்சிப் பாத்திரத்துடன் முரண்பட்டுக் கொண்டிருக்கும் இரத்தினம் முதியோர் இல்லத்தின் ஓர் குறும்புக்காரன். பத்தாததற்குக் கூத்துக்காரன் வேறு. கவலையையும், கஷ்ரங்களையும் தன்னுள் புதைத்து வைத்து விட்டு சிரித்து திரிகிற மனுசன். பல்கலைக் கழகப் பிள்ளைகள் இவர்களிடம் இருந்து விடைபெறப் போகும் நேரம் தன் கவலைகளை இனியும் அடக்கி வைக்க முடியாது வெம்பி வெடித்து அழும் அந்தக் கணம் சபையை உறைய வைக்கிறது. அக்கணம் சபையே அமைதி அடைகின்றது. கம்பீர நடையில் அமைந்த, ''நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து நாம்..'' எனும் திருவாசகம் இசைக்கப்பட பார்வையாளர் கண்களில் கண்ணீர் மல்காமல் இருக்க முடியவில்லை.

''இங்க எல்லாம் தருகினம். எங்களுக்கு ஒரு குறையும் இல்லை.'' என்று அடிக்கடி சொல்லும் ரத்தினம், ''என்ன இருந்தாலும் வீட்டிலை இருக்கிறது போல வராதுதான்.'' என்று பச்சாதாப்படுவது அவருக்கு மட்டுமானதல்ல, இங்கிருக்கும் பல ஆயிரம் முதியவர்களினதும் மனஅவா.

முதுமை எப்போது வருகிறது? ஒரு மனிதன் பிறந்த கணத்தில் இருந்து அவன் மூப்பெய்த ஆரம்பிக்கின்றான். ஆனால், நாங்கள் சிலரை மட்டும் 'பழசு' என்கின்றோம். ஏன் இப்படி? அது சரியா? அந்த முதுநிலை நூலகங்களின் உள்ளே உறைந்து கிடக்கும் சோகங்கள் உங்களுக்குத் தெரியுமா? வாழ்நாள் முழுவதையும் அடுத்தவருக்கே அர்ப்பணித்து விட்டு ஆதரிக்க யாருமின்றிக் கிடக்கும் அந்த ஆன்மாக்களை நாங்கள் உதாசீனம் செய்யலாமா? ஒரு தரம் 'நீ செய்த நாடகமே' பாருங்கள். எல்லாம் புரியும்.

- துவாரகா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 சர்வதேச பல்கலைக்கழகங்களில் நேரடி அனுமதிக்கு கைகொடுக்கும் NIIT

After A/LS

e Commerce & Internet Curriculum

Bachelor Degree

NIIT இல் இரு வருட கற்கை நெறியை பூர்த்திசெய்த மாணவர்கள் U.K, U.S.A, Canada, Australia, Ireland, Newzealand ஆகிய நாடுகளின் பல்கலைக் கழகங்களில் மிகக்குறுகிய காலத்தில் பட்டதாரியாகிட நேரடி அனுமதி !



B.Sc (Hons).

## NIIT

The World Largest IT Educator

347, Kasthuriyar Road, Jaffna. TP 021 222 7250

www.niit.com

37 நாடுகளில் 3800ற்கு மேற்பட்ட எமது கிளைகளில் உள்ள 2.5 மில்லியன் மாணவர்களுடன் நீங்களும் இணையுங்கள்

---

இளைய சமுதாயத்தின் வேலைவாய்ப்புக்கு

## ஜனசக்தி காப்புறுதி நிறுவனம்

வழங்கும்

# வழிகாட்டல் கருத்தரங்கு

மாணவப்பருவம் முடித்து தாம் உழைக்கும் எண்ணத்துடன் தம் குடும்பங்களை பொருளாதார ரீதியாக வளப்படுத்தி சமுதாயத்திற்கும் நற்சேவை செய்து வாழ நினைக்கும் இன்றைய இளம் சமுதாயத்திற்கு ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் தொழில்சார் வழிகாட்டல் கருத்தரங்கினை வழங்க முன்வந்துள்ளது.

**இடம்:** யாழ்.பொதுநூலக கேட்போர் கூடம்
**காலம்:** 23.06.2006 (வெள்ளிக்கிழமை)
**நேரம்:** காலை 9.30 மணி

'காப்புறுதி என்றால் ஜனசக்தி'

JANASHAKTHI INSURANCE

**குறிப்பு:**

மேற்படி கருத்தரங்கு தொழில் சார்ந்துள்ளமையால் தங்களின் நேரம் தவறாத வருகையும் உடையின் சீர் நிலையும் கருத்தரங்கில் தங்களின் ஆர்வமும் எம்மால் மிகவும் நுணுக்கமாகக் கவனிக்கப்படும் என்பதை முன்கூட்டியே தெரிவித்துக் கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடந்த ஆண்டு நவம்பரில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் நாட்டின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வாழும் பெரும்பாலான தமிழ் மக்களை வாக்களிக்காது பகிஷ்கரிக்க வைப்பித்ததன் மூலம் நாட்டின் ஜனாதிபதி வேட்பாளர்களது தலைவிதியை மாற்றி எழுதியவர் பிரபாகரன்.**

**அந்தவகையில் நாட்டில் மீண்டுமொரு பொதுத்தேர்தல் இடம்பெறக் கூடுமென்ற ஊகங்கள் வெளிவந்த வண்ணமிருக்கும் இன்றைய நிலையில் அத்தகைய பொதுத்தேர்தலொன்று இடம்பெறுமானால், அதனைப் பிரபாகரன் எத்தகைய கோணத்தில் கையாள முயலக்கூடுமென ஊகம் வெளியிடுகிறார் கட்டுரையர்ளர் உபுல்யோசெப் பெர்னாண்டோ. 'லங்காதீப' நாளிதழில் வெளிவந்த கட்டுரையின் தமிழ் வடிவத்தைக் கீழே தருகிறோம்.**

யங்களை மனதில் கொண்டே தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார்.

அந்த வகையில் நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான தமது யோசனைகளை முன்வைத்து ஐ.தே.கட்சி மற்றும் எனைய கட்சிகளுடன் பேச்சுகளை ஆரம்பித்தார்.

அவ்விதம் இனப்பிரச்சினை தொடர்பாக கட்சிகளுடன் பேச்சுகளை ஒருபுறம் மேற்கொண்டவாறே, அடிக்கடி இரவு வேளைகளில் தினமும் ஓரிரண்டு ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் சகல ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து அவர்களை

ராஜபக்ஷ பொதுத் தேர்தலை நடத்தியிருந்திருப்பாரானால் கண்ணை மூடிக் கொண்டே சுதந்திரக் கட்சியால் 125இற்கும் கூடிய நாடாளுமன்ற ஆசனங்களை வென்றெடுத்திருந்திருக்க வாய்ப்பிருந்தது.

சின்னஞ்சிறு கட்சிகள் ஒன்றிணைந்து எதிர்க்கட்சித் தலைமைக்கு உரிமை கோருமானால், எதிர்க்கட்சித் தலைமைத்துவத்தைக் கூடத் தக்க வைத்துக் கொள்ள இயலாத அளவுக்கு ஐ.தே.கட்சியின் நாடாளுமன்றத் அங்கத்துவத்தில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கும். இத்தகையதொரு அரிய சந்தர்ப்பம் சுதந்திரக்கட்சிக்கு உருவாகியிருந்ததும் அதனைத் தடுத்து நிறுத்தியவர்கள் ஜே.வி.பி. மற்றும் ஜாதிக

# பிரபாகரனிடம் மஹிந்தராஜபக்ஷ கைடுயேந்தி நிற்க நேருமா?



கடந்த ஆண்டின் இறுதியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற கையுடனேயே நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிதாகப் பொதுத் தேர்தலொன்றை நடத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தவறியமை அவர்செய்த முட்டாள்த்தனம்.

1999 ஆம் ஆண்டில் ஜனாதிபதியாக இருந்த சந்திரிகாவும் அத்தகைய முட்டாள் தனமான தவறையே மேற்தொண்டார். 1999 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலில் தாம் வெற்றியடைந்ததையடுத்து, சந்திரிகா நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிதாகப் பொதுத் தேர்தலொன்றை நடத்த முன்வருவாரென, அந்தவேளையில் அவருடன் அரசியலில் நெருக்கமாகச் செயற்பட்ட எஸ்.பீ.திஸநாயக்க, மங்கள சமரவீர, அனுருத்த ரத்வத்தை மற்றும் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோர் எதிர்பார்த்தனர்.

1999 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்றதையடுத்து ஐ.தே.கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகியன போக்கிடம் அற்ற நிலையில் பின்னடைவை எதிர்நோக்க நேர்ந்தது. அந்தவேளையில் சந்திரிகா நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலை நடத்தியிருந்தால் சுதந்திரக்கட்சியால் 125 நாடாளுமன்ற ஆசனங்களையாவது கைப்பற்றியிருக்க முடியும்.

அந்த நிலையில் ஐ.தே.கட்சி தன்வசமிருந்த நாடாளுமன்ற ஆசனங்களில் அரைவாசிக்கும் மேற்பட்ட தொகையை இழக்க நேர்ந்திருக்கும். சிலவேளை ஜே.வி.பி. தன்வசமிருந்த ஒரேயொரு நாடாளுமன்ற ஆசனத்தை மட்டுமே தக்க வைத்துக் கொண்டிருந்திருக்கும். ஆனால், ஏதோவொரு காரணத்தால், சந்திரிகா 1999 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்குப் பின்னரும்கூட நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிதாகப் பொதுத் தேர்தலொன்றை நடத்த முன்வரவில்லை.

அதற்குப் பதிலாக சந்திரிகா பத்து மாதங்களாக காலத்தை இழுத்தடித்தபின் 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத்தேர்தலொன்றுக்கு உத்தரவிட்டார்.

இடைப்பட்ட அந்தப் பத்துமாத காலத்துள் நாட்டில் வாழ்க்கைச் செலவு பலமடங்கு அதிகரித்து விட்டிருந்தது. இடைப்பட்ட அந்தப் பத்து மாத காலத்துள் இலங்கை இராணுத்தால் முன்னொரு போதிலும் இழக்கப்படாத ஆனையிறவு இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் கைப்பற்றிக் கொண்டது மட்டுமன்றி யாழ்ப்பாண நகரின் நுழைவாயில் வரை முன்னேறிச் சென்றிருந்தனர்.

இடைப்பட்ட அந்தப் பத்து மாத காலத்துள் ஐ.தே.கட்சி - 1994 ஆம் ஆண்டில் எதிர்க்கட்சியாக நேர்ந்ததன் பின்னர் - பெரிய அளவில் திட்டமிட்டு, நாட்டின் நாலா புறங்களிலுமிருந்து தமது ஆதரவாளர்களைக் கொழும்பில் ஒன்றுகூடவைத்து அரசுக்கு எதிராகப் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தது.

இடைப்பட்ட அந்தப் பத்து மாத காலத்துள் அரசுக்கு எதிராக சந்திரிகாவுக்கு எதிராக - தமது பல எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலமாக ஜே.வி.பியினர் முக்கிய இரு கட்சிகளுக்கும் சவால் விடுக்குமளவுக்கு பலம் வாய்ந்த சக்தியாக உருவாகியிருந்தனர். இத்தகைய அரசியல் சூழ்நிலை ஒன்றிலேயே சந்திரிகா 2000 ஆம் ஆண்டு ஒக்டோபரில் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிதாக பொதுத் தேர்தலொன்றுக்கு உத்தரவிட்டார்.

இடைப்பட்ட அந்தப் பத்து மாத காலத்துள் சந்திரிகாவின் அரசு படிப்படியாக நாட்டு மக்களது அதிருப்திக்கு ஆளாகியிருந்தது. அவ்விதம் பொதுமக்களது அதிருப்திக்கு ஆளான நிலையில் நடத்தப்பட்ட பொதுத் தேர்தல் முடிவுகள் குறித்து சந்திரிகாவின் அரசில் இடம்பெற்றிருந்தோரிடையே வெற்றி குறித்து சந்தேகம் நிலவி வந்தது. அத்தகைய சந்தேக நிலையைப் போக்கி, பொதுத் தேர்தலில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அந்த வேளையில் சுதந்திரக் கட்சியின் செயலாளராகவிருந்த எஸ்.பி. திஸநாயக்க பலவிதங்களில் திட்டமிட்டுப் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றார்.

2000 ஆம் ஆண்டில் இடம்பெற்ற அந்தப் பொதுத் தேர்தலில் நிறையவே ஊழலும் மோசடிகளும் இடம்பெற்றதாக, ஐ.தே.கட்சியில் இணைந்து கொண்டதன் பின்னர், எஸ்.பி.திஸநாயக்க கருத்து வெளியிட்டிருந்தார். அவ்விதம் ஊழல்களையும் மோசடிகளையும் மேற்கொண்ட போதிலும் அந்தப் பொதுத் தேர்தலில் சுதந்திரக் கட்சியால் பெரும்பான்மையைப் பெற இயலாது போய்விட்டது.

பெரும்பான்மையை நிரூபிப்பதற்காக சுதந்திரக் கட்சி ரவூப் ஹக்கீமின் தலைமையிலான முஸ்லீம் காங்கிரசின் ஆதரவையும் தேரரிப் பெற்றுக்கொள்ள நேர்ந்தது. ஓராண்டு காலம் முடிவடைவதற்குள் ரவூப் ஹக்கீம் அரசுக்கு வழங்கிய ஆதரவை விலக்கிக் கொண்டார். அதையடுத்து பெரும்பான்மையை இழந்ததால் அரசு வீழ்ச்சியுறநேர்ந்தது.

1999ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற கையுடனேயே நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலொன்றுக்கு உத்தரவிடாதது தாம் மேற்கொண்ட முட்டாள்தனமே என்பதை, 2002 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் முடிவுகள் வெளியானதையடுத்து, பெரும்பான்மையை நிரூபிப்பதற்காக ரவூப் ஹக்கீமின் ஆதரவை வேண்டி அவரை அணுகிய வேளையிலா, அல்லது அரசினின்றும் விலகி ரவூப் ஹக்கீம் எதிர்க்கட்சியுடன் இணைந்து கொண்ட வேளையிலா சந்திரிகாவால் உணர முடிந்தது என்பதை அவரிடம் மட்டுமே கேட்டுத் தெரிந்து கொள்ள இயலும்.

உண்மையில் 1999 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிவாகை சூடிய வேளை முதல் சந்திரிகாவின் மனதில் மூன்று விடயங்கள் ஆழமாகப் பதிந்து விட்டிருந்தன.

என்னை அரசியலில் தோற்கடிக்க எந்தவொரு சக்தியாலும் இயலாது. நான் விரும்பினால் அரசமைப்பில் உரிய மாற்றங்களைக் கொண்டுவந்து எனது வாழ்நாள் முழுவதும் அரசியலில் என்னால் நிலைத்திருக்க முடியும்.

ஐ.தே.கட்சியால் இனியொரு போதும் தலை தூக்கவே இயலாது. அக்கட்சியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சுதந்திரக் கட்சிக்குள் இழுத்து ஐ.தே.கட்சியை முற்று முழுதாக ஒழித்துவிட வேண்டும்.

பிரபாகரன் எப்படியாவது போகட்டும்! ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சுதந்திரக் கட்சிக்குள் இழுத்துக் கொண்டு இனப்பிரச்சினைக்கு நான் விரும்பும் தீர்வை நடைமுறைப்படுத்துவதற்காக சர்வ கட்சி,மாநாடொன்றைக் கூட்டி இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

1999ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற நாள் தொடக்கம் 2000 ஆம் ஆண்டில் [illegible] கும் வரை சந்திரிகா [illegible] அரசில் இணைத்துக் கொள்வதற்கான பேச்சுகளை - பேரம் பேசல்களைச் சந்திரிகா மேற்கொண்டு வந்தார்.

அந்த நாள்களில் பகல்வேளையில் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஐ.தே. கட்சியுடன்உத்தியோகபூர்வ பேச்சுகளில் ஈடுபட்டுக் கொண்டு, இரவுவேளைகளில் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசுடன் இணைய வைப்பதற்கான முயற்சிகள் குறித்து தமது நெருங்கிய அரசியல் சகாக்களுடன் கலந்தாலோசித்துத் திட்டம் தீட்டினார் எனச் சந்திரிகா விமர்சிக்கப்பட்டார்.

உண்மையில் 1999 ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற வேளைமுதல் 2000 ஆம் ஆண்டு ஒக்டோபரில் நாடாளுமன்றம் கலைக்கப்படும் வேளைவரை உள்நாட்டுப் பத்திரிகைகளில் வெளிவந்த தலைப்புச் செய்திகள் மேற்கூறிய நடவடிக்கைகளுக்குச் சாட்சி பகர்வனவாக அமைந்திருந்தன.

''இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக சந்திரிகாவும் ரணிலும் தொடர் பேச்சு''

''ஐ.தே.கட்சியின் பத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைவில் அரசில் இணையவுள்ளனர்''

''ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசில் இணைத்துக் கொள்ள இரகசியப் பேச்சு''

இவை மேற்குறிப்பிட்ட கால கட்டத்தில் உள் நாட்டுப் பத்திரிகைகளில் பிரசுரமான தலைப்புச் செய்திகளாகும். அத்தகைய பத்திரிகைச் செய்திகளை வாசித்த பொதுமக்கள் ''சந்திரிகாவை ஒருபோதும் எவராலும் அசைக்கமுடியாது; ஐ.தே.கட்சி மெல்ல மெல்ல உடைந்து கடைசியில் இல்லாமல் போய்விடப் போகிறது'' என்றெல்லாம் பேசத் தலைப்பட்டனர். ஆனால், அவ்விதம் விமர்சித்த பொதுமக்களே 2001ஆம் ஆண்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் சந்திரிகாவை ஒருபுறம் ஒதுக்கித் தள்ளி விட்டு ஐ.தே.கட்சியை அதிகாரத்துக்குக் கொண்டு வந்தனர் என்பதுதான் ஆச்சரியம் அளிப்பதொன்றாகும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த வரலாற்றை மறந்திருக்க முடியாது.

இந்தப் பழைய சம்பவங்கள் அவருக்கு ஞாபகமிருந்திருக்குமானால், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற கையுடனேயே நாடாளுமன்றத்தைக் கலைத்து மீண்டும் பொதுத் தேர்தலொன்றை நடத்த அவர் தவறியிருக்கமாட்டார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றதையடுத்து நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டுப் பொதுத் தேர்தலொன்றை நடத்த மஹிந்த எண்ணியபோதிலும் ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் அப்படிச் செய்வதற்கு அவரை அனுமதிக்கவில்லை. அந்த வகையில் மஹிந்த ராஜபக்ஷ, சந்திரிகாவைப் போன்று முட்டாளாகாத போதிலும், நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டுப் பொதுத் தேர்தலொன்றை நடத்தும் திட்டத்தை தவிர்த்துக் கொண்டார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் வெற்றியின் பின்னர் சூட்டோடு சூடாக மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டுப் பொதுத் தேர்தலொன்றுக்கு உத்தரவு இட்டிருப்பாரானால், ஐ.தே.கட்சி பொதுத் தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தேடி வீட்டுக்கு வீடு அலைய நேர்ந்திருக்கும்.

ஜே.வி.பியினர் சுதந்திரக் கட்சியுடன் கூட்டமைத்துப் போட்டியிட்டிருந்தாலும் சரி, அல்லது தனித்துப்போட்டியிட்டிருந்தாலும் சரி இப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் தொகை அவர்களுக்கு நிச்சயம் கிட்டியிருக்காது. அதேசமயம், ஹெல உறமய கட்சியால் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைக் கைப்பற்ற முடிந்தாலும் அது ஆச்சரியமான தொன்றாகவே அமைந்திருக்கும்.

சுருக்கமாகச் சொல்வதானால், ஜனாதிபதித் தேர்தல் வெற்றியை அடுத்து உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைத்து மஹிந்த





ஹெல உறுமய ஆகிய தீவிர சக்திகளே.

உண்மையில் ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய தரப்புகளின் இந்தச் செயற்பாடு ஐ.தே.கட்சிக்கே லாபத்தை ஏற்பத்தியது. ஐ.தே.கட்சி இதற்காக ஜே.வி.பிக்கும் ஜாதிக ஹெல உறுமயவுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

இவ்விதம் ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் நாடாளுமன்றம் கலைக்கப்படுவதைத் தடுத்து நிறுத்திவிட்டாலும், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற நாள்முதல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனதில் மூன்று விடயங்கள் ஆழமாக வேரூன்றிவிட்டுள்ளன. எதிர்வரும் 12 ஆண்டுகளுக்கு நானே நாட்டின் ஜனாதிபதி. என்னை அந்தப் பதவியிலிருந்து எவராலும் அகற்றிவிட இயலாது.

ஐ.தே.கட்சி ஒட்டு மொத்தமாக அழிந்து விடப் போகிறது. வேண்டுமானால் ரணில்

**தமிழில்:வீயெஸ்ரி**

விக்கிரமசிங்கவை மட்டும் விடுத்து, ஏனைய ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசுடன் இணைய வைத்து, ஐ.தே.கட்சி என்றதொரு கட்சியே இல்லை என்ற அளவுக்கு என்னால் செய்துவிட முடியும்.

ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசின் பக்கம் திருப்பியாவது, மஹிந்த சிந்தனைக் கோட்பாட்டின்படி ஒற்றையாட்சி முறைக்குள் பிரச்சினைக்குத் தீர்வுக்கான சர்வ கட்சிகளின் இணக்கப்பாட்டைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். அதற்குப் பிரபாகரன் இணங்கினாலும் சரி, இணங்காவிட்டாலும் சரி அதனை நான் பெரிதுபடுத்திக் கொள்ளப் போவதில்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற நாள்முதல் மேற்குறிப்பிட்ட மூன்று நோக்கங்களை மனதில் வைத்தே தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனிடம் மஹிந்தராஜபக்ஷ...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்தகைய நோக்கத்துடனேயே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக சர்வ -கட்சி மாநாட்டைக் கூட்டி விவாதிக்கும் பொருட்டு ஐ.தே.கட்சி உட்பட்ட சகல கட்சி -களுக்கும் அழைப்பு விடுத்திருந்தார்.

சர்வகட்சி மாநாட்டைக் கூட்டும் அதே வேளை ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பி னர்களை அரசில் இணைத்துக் கொள்வதற் காக அவர்களுடன் பேச்சுகளை மேற் கொள்ள சுதந்திரக் கட்சியின் மத்திய செயற் குழுவின் அனுமதியையும் பெற்றுக்கொண் டுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்த லில் வெற்றிபெற்ற நாள் முதல் உள்நாட்டுப் பத்திரிகைகளில் வெளிவந்த தலைப்புச் செய்திகள் மேற்கண்ட நடவடிக்கைகளை உறுதிசெய்வதாக அமைந்துள்ளன.

சர்வகட்சி மாநாட்டுக்கு ஐ.தே.கட்சி பூரண ஆதரவு நல்கும்.

ஐ.தே.கட்சியின் 10 நாடாளுமன்ற உறுப் பினர்கள் மிகவிரைவில் அரசில் இணைந்து கொள்வர்.

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பி னர்களை அரசுடன் இணைய வைப்பதற்காக இரகசியப் பேச்சு.

இத்தகைய பத்திரிகைத் தலைப்புச் செய் திகளை வாசிக்கும் பொதுமக்கள் மஹிந்த ராஜபக்ஷ இன்னமும் 12 ஆண்டுகளுக்கும் மேலாக ஜனாதிபதிப் பதவியை வகிக்க வுள்ளார். ஐ.தே.கட்சியைக் கலைத்துவிட வேண்டி நேரப்போகிறது என்று தம்மி டையே விமர்சிக்க முயலக்கூடும்.

அதாவது மஹிந்த ராஜபக்ஷ இவற்றால் உணர்ச்சி வசப்பட்டு தற்போது நாடாளுமன் றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலொன்றை நடத்த முயன்றால் 2001ஆம் ஆண்டில் சந் திரிகாவுக்கு ஏற்பட்ட கதியே மஹிந்த ராஜ பக்ஷவுக்கும் ஏற்படக்கூடுமா? அதை இப் போது சொல்ல முடியாதுள்ளது

ஏனெனில், இம்மாதம் 17 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டின் ஜனாதிப தியாகத் தெரிவுசெய்யப்பட்டு 7 மாதங்கள் முடிவடைகின்றன.

தற்போதுபோய் ஜனாதிபதி நாடாளுமன் றத்தைக் கலைத்து விடுவதெனத் தீர்மானிப் பாரானால், புதிய பொதுத் தேர்தலை எதிர் வரும் ஆகஸ்ட் அல்லது செப்ரெம்பர் மாதத் திலேயே நடாத்த வேண்டிநேரிடும்.

அதாவது 1999 இல் ஜனாதிபதிப் பத வியை வென்றெடுத்த சந்திரிகா பொதுத்தேர் தலை நடத்துவதற்கு 10மாதங்கள் இழுத்த டித்தமை போன்று மஹிந்த ராஜபக்ஷவும் தாம் ஜனாதிபதிப் பதவியை வென்றெடுத்த கடந்த ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து 10மாதங்களை இழுத்தடித்தே பொதுத்தேர் தலை நடத்துவதாக அது அமையும்.

கடந்த 7மாத காலத்தில் முன்னரைவிட வாழ்க்கைச் செலவு பெரிய அளவில் உயர்ந் துள்ளது. இனப்பிரச்சினை தொடர்பான சமா தான முயற்சிகள் பெருமளவு சிக்கல்களுக்கு உள்ளாகியுள்ளது. யுத்தமொன்று மீண்டும் வெடிக்கும் பயங்கர சூழ்நிலை உருவாகி யுள்ளது. அரசினுள்ளேயே ஊழல்கள் தலை விரித்தாடுவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவே குற்றஞ்சாட்டும் நிலை உருவாகி யுள்ளது.

இந்நிலையில் பொதுத்தேர்தலொன்றை நடத்துவதென ஜனாதிபதி தீர்மானித்தால் அதன் பலாபலன் என்னவாகும்?

அதுபற்றிக் கேட்கக்கூடிய பொருத்தமான நபர் பிரபாகரனே! ஏனெனில், தற்போது பொதுத் தேர்தலொன்றை நடத்த இயலுமா? அல்லது இயலாதா? எனத் தீர்மானிப்பவர் பிரபாகரனே!

கடந்த ஆண்டின் இறுதியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது பிரபாகரன் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வாழும் பொது மக்களை வாக்களிக்காது தடுத்து விட்டதன் மூலம் தாம் விரும்பியவர் நாட்டின் ஜனாதி பதியாகத் தெரிவாவதற்கான பின்னணியை உருவாக்கிக் கொடுத்தார்.

இந்தநிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ பொதுத் தேர்தலொன்றை நடத்தத் தீர் மானிப்பாரானால் பிரபாகரன் யுத்தமொன்றை ஆரம்பித்து அரசின் அந்த முயற்சியைக் குழப்பிவிட முடியும். அல்லது வடக்கு - கிழக்குப் பகுதிகளில் விடுதலைப் புலிகளது கட்டுப்பாட்டிலுள்ள மாவட்டமொன்றில் வாக்களிப்பேதும் இடம்பெற இயலாத அளவுக்கு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி வாக்களிப்பையே முற்றுமுழுதாக நிறுத்தி விடவும் கூடும்.

சட்டப்படி அவர் பெற்றுக்கொண்ட வாக் குகள் அந்தத் தொகுதியில் பதிவான மொத்த வாக்குகளின் 20 சதவீதத்துக்குக் குறைந்திருக் கக்கூடாது. அவ்விதம் குறைந்தால் அவரது அந்தத் தேர்தல் வெற்றி உண்மையான சட்டப் படியான வெற்றியாகக் கருதப்பட இயலாது.

தாய்லாந்தின் பிரதமர் தக்ஷினைப் பதவி யிலிருந்து அகற்ற அந்நாட்டின் எதிர்க்கட்சி கள் இதனையே தமது துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தின. தாய்லாந்தின் பிரதமர் நடத்தி முடித்த பொதுத் தேர்தலில் அந்நாட்டின் எதி ரணிகள் தமக்குக் கடும் ஆதரவான பகுதி களில் பொதுமக்களைக் கொண்டுதேர்தல் வாக்களிப்பைப் பகிஷ்கரிக்க வைத்தனர்.

ஆதலால், பொதுத் தேர்தலில் தேர்ந்தெ டுக்கப்பட்ட அபேட்சகர்கள் பலர் தாய்லாந் தின் எதிரணி அரசியல் தரப்புகளால் மேற் கொள்ளப்பட்ட இத்தேர்தல் புறக்கணிப்புக் காரணமாக 20சதவீதத்துக்கு மேல் வாக்கு களைப் பெற்றுக்கொள்ள இயலாது போயிற்று. அதன் காரணமாக தாய்லாந்தில் இடம்பெற்ற பொதுத் தேர்தல் சவால்களை எதிர்நோக்கக் காரணமாயிற்று.

பிரபாகரன் இவை யாவற்றையும் நன்கு தெரிந்து வைத்துள்ளார். அதனால், இலங்கை யில் பொதுத் தேர்தலொன்று நடத்தப்படுமா னால் இங்கும் தாய்லாந்து போன்றதொரு நிலையை உருவாக்கி வடக்கு- கிழக்கில் தமது கட்டுப்பாட்டிலுள்ள மாவட்டமொன் றில் பூரணமாக தேர்தல் இடம்பெறாது தடுப் பதன் மூலம் நாட்டின் ஏனைய மாவட்டங் களின் தேர்தல் முடிவுகளைக் கொண்டு புதிய அரசொன்றினை உருவாக்க இயலாத நிலையொன்றைப் பிரபாகரன் ஏற்படுத்த முயலக்கூடும்.

சட்டதிட்டங்களுக்கு உட்படாத வகை யில் இலங்கை அரசு ஏனைய மாவட்டங் களின் தேர்தல் முடிவுகளின் மூலம் புதிய நாடாளுமன்றமொன்றினைக் கூட்ட முயலு மானால் அந்தவேளையில் பிரபாகரன் வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கென புதிய நாடாளுமன்றமொன்றினை அமைக்கும் வகையில் தமிழ்ப் பகுதிக்கெனத் தனியான அரசொன்றினை அங்கீகரிக்குமாறு சர்வதேச சமூகத்தைக் கேட்டுக்கொள்ள முயலக்கூடும்.

கடந்த ஆண்டில் இடம்பெற்ற ஜனாதி பதித் தேர்தலைத் தமிழ்மக்கள் பகிஷ்கரிக்க வைத்ததன் மூலம் இன்றைய நாட்டின் ஜனாதிபதி தமிழ்மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஜனாதிபதியல்லர் என வெளிப் படுத்த முயன்ற பிரபாகரன் நாட்டின் வடக்கு- கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இலங்கை நாடாளு மன்றத்தில் அங்கம் வகிக்கவில்லை என்பதை நிலைநிறுத்த முடியுமானால் இலங்கையில் இரு வேறு நாடுகள் இயங்குகின்றன என்பதை உலகத்துக்குக் காட்டி நிரூபிக்க வேறு எந்த வொருசாட்சியமும் தேவைப்படப் போவதில்லை.

அந்த வகையில், கடந்தஆண்டில் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பிரபாகரன் தனது இலக்கில் வெற்றிபெற்றார். அதே போன்று திட்டமிடப்படும் நாடாளுமன்றத் தேர்தலிலும் அதனைத் தமிழ்ப் பகுதிகளில் முற்றுமுழுதாக என்றில்லாவிட்டாலும் குறிப் பிட்ட ஒரு மாவட்டத்திலாவது முற்று முழு தாகப் புறக்கணிக்கப்படவைப்பதன் மூலம் நாடாளுமன்ற நடைமுறைக்குச் சவால் விடுக்கத் தக்க வாய்ப்பைப் பிரபாகரனுக்கு ஏற்படுத்திக்கொடுத்துவிடாது . இன்றைய சிரமம்மிக்க சந்தர்ப்பத்தில் நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய பொறுப்பை ஜனாதிபதி மஹிந்த பொறுப்புடன் நிறைவேற்றக் கடமைப் பட்டுள்ளார்.

*


## COMPUTER EXPRESS
**Institute of Information Technology**
இல.15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.
021-222 8250,0777 222422

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற
Graphic துறையில் புதிய வடிவமைப்புக்களுடன் ஒருவாரகால முழுநேர பயிற்சிநெறி

**Diploma in Graphic Designing**

*Course Contents*
- கணனி தொடர்பான அறிமுகம்
- இயக்க அமைப்பு (Windows XP)
- Internet & e-mail
- Adobe Photoshop
- CorelDRAW
- Cool 3D Studio
- Macro media Flash MX
- Introduction to 3D Albam
- Extra practical

Course fee :- 2000/=

**Diploma in Video Mixing**

*Course Contents*
- கணனி தொடர்பான அறிமுகம்
- இயக்க அமைப்பு (Windows XP)
- Internet & e-mail
- Adobe Photoshop
- Adobe Premiere
- Cool 3D Studio
- Pinnacle Studio
- VCD Cutter
- Extra practical

Free Study Pack & Photos CD

Course fee :- 3000/=

நன்மைகள்:-
- பாடநெறியின் இறுதியில் பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுவதால் கணனி தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடனான விரிவுரைகளிற்கு உத்தரவாதம்.

வகுப்புக்கள் ஆரம்பம்:- 19/06/2006 :- 08.30






## Christian Aid

### Vacancy Announcements

**1. Emergency Support Officer**
**Salary from LKR 415,152 per annum**

Christian Aid is looking to fill the position of an Emergency Support Officer based in Jaffna. The objective of the post is to support the capacity development of the Christian Aid partners under the direction of the Programme Officer based in Jaffna

The Emergency Support Officer's main role is:
- To work with partne and Field Officers to provide support in emergency respons planning, project preparation
- To provide capacity support to partners in implementing the Christian Aid Emergency Response Programme in Sri Lanka
- To monitor and report on the progress of the emergency programmes of Christian Aid partners
- To represent Christian Aid at meetings within both national and international fora and participate in inter-agency groups; and to support effective internal communication

**QUALIFICATIONS & EXPERIENCE REQUIRED**

**Essential**
- Education to degree level or equivalent preferably in development or related subject
- At least two years of emergency or development programme work, preferably one of which should be with an International NGO
- Experience of capacity building and the use of participatory techniques
- Fluent in written and spoken English and Tamil
  - Working knowle e of Word and Excel
  - Experience of p ducing narrative and financial reports
  - Experience of working with partners

**Desirable**
- Degree in development or related subject
- Word-processing / keyboard qualifications
- Spreadsheet/database qualifications
- Bookkeeping or basic accounting

**An attractive remuneration package awaits the selected candidates**

**How to apply for the position**

Applicants should send a application indicating which job they are applying for to Christian Aid, stating how they fit the selection criteria and should attach a copy of their CV with contact details to:

**Christian Aid, 3/1 22 Palmyrah Avenue, Kollupitiya, Colombo 3**
**OR BY EMAIL TO:**
**christianaid@sltnet.lk**

Christian Aid is a leading UK and Irish development Agency, which has been providing support to partner organisations in Sri Lanka for over 30 years. Registered with the Ministry Of Social Services Christian Aid works to relieve poverty and suffering and works with persons of all faiths according to need.

Only shortlisted candidates will be contacted
Closing date 2nd July, 2006


## கச்சாய் கடலேரியில் 'பேச்சாளை' மீன்கள்

சாவகச்சேரி- கச்சாய் கடலேரியில் 'பேச்சாளை' என்னும் மீன்கள் பெருமளவில் பிடிக்கப்படுவதாக கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். (117)

## கும்பாபிஷேகம்

அல்வாய் வடக்கு அருள்மிகு அரசடி விநாயகர் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நூதன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் இன்று காலை 6.55 மணி முதல் 7.55 மணிவரை நடைபெறவுள்ளது.

## நாடகப் பயிலகத்தின் புதிய பிரிவு ஆரம்பம்

யாழ்.திருமறைக் கலாமன்றத்தினால் நடத்தப்பட்டுவரும் நாடகப் பயிலகத்தின் 2006ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவின் ஆரம்ப வைபவம் அண்மையில் கலாமன்ற அரங்கில் நடைபெற்றது.

கலாபூஷணம் ஜி.பி.பேர்மினஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக நாடகக் கலைஞர் எஸ்.ரி. அரசையா கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். வரவேற்புரையை திருமறைக்கலாமன்ற ஊடக இணைப்பாளர் கி.செல்மர் எமிலும், அறிமுகவுரையைக் திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ. யோண்சன் ராஜ்குமாரும் நிகழ்த்தினர். இந்த நிகழ்வின் போது கடந்த 2004ஆம், 2005ஆம் ஆண்டுகளில் நாடகப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் இனப்படுகொலையைத் தடுக்க தமிழீழம் நீங்கலாக வேறுவழி உண்டா?

கெப்பிற்றிக்கொல்லாவவில் பயணிகள் பஸ் கிளைமோர் தாக்குதலில் சிக்கியதில் 65 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். இச்செயலை யார் செய்திருந்தாலும் மனிதாபிமான அடிப்படையில் நாம் இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம். தமிழ் உயிர்கள் உயர்ந்தவை; சிங்கள உயிர்கள் தாழ்ந்தவை என்று எண்ணுகிற அளவிற்கு மானிடப்பண்பினை இழந்த விலங்கு மனநிலையில் நாம் இல்லை. உயிர்கள் புனிதமானவை அவற்றை நாம் இழக்கின்றபோது அவற்றை மீண்டும் பெறமுடியாது என்பதை நாம் நன்கு உணர்ந்த நிலையில் மனித உயிர்களை நாம் மதிக்கின்றோம். நாம் மட்டுமல்ல உலகிலுள்ளோர் அனைவரும் அவ்விதமே கருதுவர்.

ஆனால், எமக்குத் தாங்கொணாத்துயரைத் தரும் நிகழ்ச்சி யாதெனில், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை, மூதூர் ஆகிய பகுதிகளில் நேற்றும், நேற்றுமுன்தினம் முழுநாளும் தொடர்ச்சியாக வான்தாக்குதல் நடைபெற்றுள்ளது. குண்டுத் தாக்குதல் நடைபெற்றது என்பதை விட குண்டுமழை எம்மீது பொழியப்பட்டதுதான் என்பதுதான் ஏற்புடைய சொற்றொடராகும்.

**வன்னியிலும் வான் படைத்தாக்குதல்**

எமக்குக் கிடைத்த நம்பத்தகுந்த செய்திகளின்படி இலங்கை வானூர்திப்படை கிபிர், மற்றும் மிக் - 29, ஜெட் போர் வானூர்திகள் பெரும் எடுப்பில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது கடுமையான தாக்குதல்களை நடத்தியுள்ளன. ஆனால், மக்களின் பேரழிவிற்கும் அவர்களின் உறைவிடங்களின் பெரும் சேதத்திற்கும் கால்நடைகள் நூற்றுக் கணக்கில் உயிரிழப்பதற்கும் கால்களை இழப்பதற்கும் காரணமாய் இத்தாக்குதல் நடைபெற்றதைக் கண்டிப்போர் எவருமில்லை. நேற்றுமுன்தினம் முல்லைத்தீவில் விமானப்படையின் கிபிர் விமானங்கள் மக்கள் குடியிருப்புக்களை இலக்குவைத்து குண்டு மழை பொழிந்துள்ளன.

இரு கிபிர் விமானங்கள் கிளைமோர்த் தாக்குதல் இடம்பெற்ற தினத்தன்று முற்பகல் 11.45 மணியளவில் முல்லைத்தீவு வான் பரப்பில் நுழைந்து செல்வபுரம், வட்டுவாகல் மக்கள் குடியிருப்புகளையும் கடல்கோளினால் பாதிக்கப்பட்ட நிலையில் ஏதுமற்ற ஏதிலிகளாக வாழும் மக்கள் முகாம்களையும் இலக்குவைத்து குண்டுகள் வீசியுள்ளன.

"பட்டகாலே படு கெட்டகுடியே கெடும்" என்பதற்கமைய கடல்கோளிற்கும் அதற்கு முன்பும் இதே மக்கள் போரினால் ஏற்பட்ட குண்டு வீச்சினால் பாதிக்கப்பட்டவர்கள், பின்பு ஆழிப்பேரலையால் அழிக்கப்பட்டு அன்றாட வாழ்க்கைக்குக் கூட திண்டாடும் அவல நிலையில் உள்ளனர்.

எமக்குக் கிடைத்த செய்திகளின்படி முதல் தாக்குதலில் 15 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். குடியிருப்புக்கள் தீக்கிரையாக்கிச் சேதமாகியுள்ளன. மக்களுக்கு வாழ்வு கொடுக்கும் கால்நடைகள் கொல்லப்பட்டுள்ளன. மீண்டும் 11.57 மணியளவில் கிபிர் விமானத்தாக்குதல் நடைபெற்றுள்ளது. நல்லவேளையாக 300 இற்கும் மேற்பட்டோர் தங்கியிருந்த கடல்கோள் ஏதிலிகள் முகாம் தப்பியது.

இதையடுத்து, இத்தாக்குதலிலிருந்து தம் உயிரைக்காப்பாற்ற இந்த ஏதிலிகள் இடம் பெயர்ந்துள்ளனர். கடல்கோள் அகதிகள் முகாம் அருகருகே 6 குண்டுகள் வீழ்ந்துள்ளன இவற்றில் இரு குண்டுகள் வெடிக்கவில்லை.

**மட்டக்களப்பிலும் தாக்குதல்**

மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள தொப்பிகல காட்டுப்பகுதியில் சம்பவதினம் பிற்பகல் 3.15 மணியளவில் விமானப்படையினரின் மிக்-29 தாக்குதலை நடத்தியது. தரவை, புலிபாய்ந்தகல் பகுதிகளில் இத்தாக்குதல் இடம்பெற்றது. நான்கு குண்டுகள் வீசப்பட்டதாக எமக்குச் செய்திகள் கிடைத்துள்ளது. ஆனால், சேதங்களின் விவரங்கள் இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை.

இதேவேளையில், வான்படைக்குச் சொந்தமான 4கிபிர் விமானங்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் மாலை 6.25 மணிமுதல் 6.35 மணிவரை நான்கு தடவைகள் குண்டுகளை வீசிவிட்டுச் சென்றுள்ளன. இந்தக் குண்டுத்தாக்குதல் 10 நிமிட நேரம் தொடர்ச்சியாக இடம்பெற்றது. அதன் பின்னர் மீண்டும் 6.45 மணியளவில் இரு கிபிர் போர் விமானங்கள் குண்டுகளை வீசிச் சென்றுள்ளன. இதனைத் தொடர்ந்து இரு கிபிர் விமானங்கள் மீளவும் குண்டுகளை வீசின. இதேவேளை வானில் மிக உயரத்தில் பறந்தவாறு ஏவுகணை எதிர்ப்புச்சாதனங்களை இயக்கிபடிய விமானங்கள் குண்டுகளை வீசியதாக எமக்குச் செய்திகள் கிடைத்துள்ளன.

**திருமலையில் தாக்குதல்**

இதேவேளை, திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி நேற்றுமுன்தினம் குரங்குபாலத்தில் மற்றும் திருகோணமலை மற்றும் திருகோணமலை கடற்படை முகாம்களிலிருந்து பல்குழல் எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர். இவை நீங்கலாக நேற்றுமுன்தினம் 10 மணி தொடக்கம் 2.30 மணி வரை இத்தாக்குதல் நீடித்ததாகத் தெரியவருகிறது. இவ்வேளையில் பல குடியிருப்புகள், வழிபாட்டு நிலையங்கள், கல்விநிலையங்கள் சேதமடைந்ததுடன் கால்நடைகள் பெருமளவில் கொல்லப்பட்டன.

**தமிழர் அழிவுபற்றி மஹிந்தராஜபக்ஷ மௌனம் ஏனோ?**

மேற்குறித்தவற்றின் தொடர்ச்சியாக தமிழினத்திற்கு பேரழிவை ஏற்படுத்துகின்ற நோக்கில் - தமிழினத்தைப் பூண்டோடு அழிக்கின்ற முறையில் வன்னியில், முல்லைத்தீவில், மட்டக்களப்பில், திருகோணமலையில், மூதூரில் மற்றும் இன்னோரன்ன பகுதிகளில் விண்தாக்குதல் நடைபெற்றபோதும் கண்ணிருந்தும் காணாதவராய் காதிருந்தும் கேளாதவராய் குடியரசுத்தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும் அவரின் வெறிக்கும்பலும் கெப்பிற்றிக்கொல்லாவவில் நடைபெற்ற அழிவைப் பார்ப்பதற்குச் சென்றவர்கள், இதுவரை தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளில் ஈவிரக்கமற்ற நிலையில் குண்டுகள் வீசப்பட்டதைக் கண்டித்து திருவாய் மலர்ந்தருள மறுப்பது சிங்கள அரசின் இசைவைப் பெற்றுத்தான் இவ்வெறியாட்டம் நடைபெறுகின்றது என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

**மா.க. ஈழவேந்தன்**
*நாடாளுமன்ற உறுப்பினர்*

**பாரதத்தாய் பாராமுகமாய் இருப்பதேனோ?**

விடுதலைப் புலிகளைத் தடைசெய்வதில் எல்லைமீறிய அக்கறை காட்டிய ஐரோப்பிய ஒன்றியம் சரி - இச்செயலைச் செய்யத்தூண்டிய உலகின் முதலாவது பயங்கரவாதி என அழைக்கப்படும் அமெரிக்கா சரி - எமது பக்கத்து நாடாக பாசமுள்ள நாடாக விளங்கும் பாரதத் தாய் ஏன் எமக்குப் புரியமுடியாத வகையில் மௌனம் சாதிக்கிறது. தமிழகத்தின் முதலமைச்சர் - எம்மைக்காக்கும் தெய்வம் கலைஞர் எம் அழிவைத் தடுக்கின்ற முறையில் புதுடில்லி அரசிற்கு இடித்துரைப்பதில் தயக்கம் காட்டுவது ஏனோ?



ஒரு போராட்டத்தில் நாம் வெற்றியும் பெறலாம் தோல்வியும் காணலாம். ஆனால், அப்போராட்டத்தில் நாம் வீழ்ச்சியுறும்போதும் விழுப்புண் தாங்குகின்ற அளவிற்கு வீர வரலாற்றினைப் படைக்கலாம். பல களம் கண்ட நம் கலைஞரின் வாழ்வு - குறிப்பாக அவருடைய இறுதிக் கால வாழ்வு வீரம் செறிந்த வாழ்வாக விளங்குவது, ஈழத்தமிழருக்கு வாழ்வுகொடுப்பதோடு, கலைஞரின் வாழ்வு என்றுமே வீரம் செறிந்த வாழ்வாக விளங்கியதென்று வரலாறு வரைவதற்கும் வாய்ப்பினை வழங்கும்.

**மன்மோகன்சிங் மனாசிரங்க நாம் விடுத்த மடல்**

இந்தியத் துணைக்கண்டத்தின் தலைமை அமைச்சர் மன்மோகன்சிங்குக்கு 14.04.2006 இல் நான் நோர்வேயில் இருந்து எழுதிய கடிதத்தில் எமது நெருக்கடியான காலகட்டத்தில் எமக்குப் பெருந்துணை நின்ற தலைவராக தாங்கள் விளங்கவேண்டும் என்று நான் குறிப்பிட்டிருந்தேன்.

திருகோணமலையின் முதன்மையைப் பற்றி இந்திராகாந்தி அவர்கள் 1983 ஒகஸ்ட் 19இல் எனக்குக் கூறியதை நினைவுபடுத்திய நான் திட்டமிட்ட அரச சிங்களக் குடியேற்றத்தினால் தமிழ் மண் பறிபோவதை நான் உணர்கின்றேன் என்றும் அது எப்படியும் தடுத்து நிறுத்தப்படவேண்டும் என்றும் இந்திராகாந்தி கூறியதை நான் தங்களுக்கு எழுதிய கடிதத்தில் நினைவுபடுத்தியிருந்தேன். இவை அனைத்திற்கும் மேலாக இலங்கையில் நடைபெறுவது தமிழினப் படுகொலை எனத்தான் புதுடில்லி நாடாளுமன்றத்தில் முதன்முறையாக எடுத்துக்கூறியுள்ளேன் என்றும் - இந்திராகாந்தி எனக்குக் கூறியதை நான் மீண்டும் இங்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

எனவே, இந்த மிக நெருக்கடியான சூழ்நிலையில் ஈழத்தமிழ் மக்களைக் காப்பாற்ற தொப்புழ்கொடி உறவுள்ள இந்தியத் துணைக்கண்டம் துணைநிற்க வேண்டும் என்று பணிவோடு வேண்டி நிற்கின்றேன். ✱

---

# இரணைமடுக் குளத்தின் புனரமைப்பினால் குடாநாட்டுக்கு குடிதண்ணீர் கிடைக்கும்

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தினை புனரமைக்க 4 ஆயிரத்து 500 கோடிரூபா நிதி தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

'நியாப்' திட்டக்குழுவொன்று கடந்த 2003 ஆம் ஆண்டு நடத்திய மதிப்பீடு ஒன்றிலேயே இரணைமடுக் குளத்தின் முழுமையான புனரமைப்புக்கு 4 ஆயிரத்து 500 கோடி ரூபா நிதி தேவை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக் குளத்தின் முக்கியத்துவம் பற்றி தெரிந்துகொள்ளுவது அவசியமாகும்.

**வன்னிமடல்**

1902 ஆம் ஆண்டு கனகராயன் ஆற்று வடி நிலத்தினை அடிப்படையாகக் கொண்டு இரணைமடுக் குள நீர்ப்பாசன திட்டம் உருவாக்கப்பட்டது.


1920 ஆம் ஆண்டு இரணைமடுக் குளத்தின்அணைக்கட்டுப் பணிகள் நிறைவடைந்தன.

1936 ஆம் ஆண்டு இரணைமடுக் குளத்தின் நெற்செய்கைக்குரிய நிலங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

1951 ஆம் ஆண்டு இரணைமடுக் குளம் இரண்டாவது தடவையாக உயர்த்தப்பட்டது.

இரணைமடுக் குளத்தின் கீழ் உருத்திரபுரம், முரசுமோட்டை, வட்டக்கச்சி, கண்டாவளை, புளியம்பொக்கணை, திருவையாறு, இராமநாதபுரம் ஆகிய குடியேற்ற திட்ட கிராமங்கள் உள்ளன.





## ஆக்கபூர்வ செயற்பாடு முன்னெடுக்கப்படின் அதிக பலாபலன்கள் கிடைக்கும்

இரணைமடுக் குளத்தில் 45 அடி நீரைத் தேக்கி வைக்க முடியும். ஆனால் தற்போது 34 அடி நீரைக் கூட தேக்க முடியாத நிலையில் இரணைமடுக் குளத்தின் அணைக்கட்டு உள்ளது.

1975 ஆம் ஆண்டுக்கு பின்னர் இரணைமடுக் குளத்தின் அணைக்கட்டு முழுமையாகப் புனரமைப்புச் செய்யப்படவில்லை. இரணைமடுக் குளத்தின் அணைக்கட்டு, வான், சுலுசு, கால்வாய் தொகுதிகள், குடிதண்ணீர் விநியோகம் ஏற்று நீர்ப்பாசனம் அதன் கட்டுமானங்கள் சேதமடைந்துள்ளன.

இரணமடுக் குளத்தின் கீழ் 6 ஆயிரத்து 128 வரையான விவசாயக் குடும்பங்கள் விவசாய முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரணைமடுக் குளத்தின் இடதுகரை வாய்க்கால் மூலம் 17 ஆயிரத்து 945 ஏக்கரிலும், வலதுகரை வாய் கால் மூலம் 2 ஆயிரத்து 937 ஏக்கரிலும், விவசாய முயற்சிகள் இடம்பெறுகின்றன. இரணைமடுக் குளத்தின் கீழ் பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்க வேண்டிய நிலையில் புனரமைப்பு பணிகள் முழுமைபெறாததினால் அந்தச் செயற்பாடுகள் முடங்கியுள்ளன.

**- கி.மைதினி -**

இரணைமடுக் குளத்தில் முழுமையான முறையில் நீர் தேக்கி வைக்கமுடியாத நிலையில் பெருமளவு நிலப்பரப்புகள் வெற்றுத் தரவையாக்க் காணப்படுகின்றன.

இரணைமடுக் குளம் முழுமையாகப் புனரமைக்கப்பட்டு நீர் தேக்கம் சிறப்பாக இடம்பெறுமானால், யாழ்ப்பாணத்திற்கு இரணைமடுக் குள நீரை எடுத்துவர முடியும்.

அத்துடன் கனகராயன் ஆறு, பேராறு என்பன சந்திக்கும் இடத்தில் இரணைமடுக் குளத்திற்கு நிகராக நீர்த்தேக்கம் ஒன்றை உருவாக்கி கொள்வதன் மூலம் இரணைமடு குளத்தில் நீர் குறையும் போது நீர் தேக்கத்திலிருந்து பயன்படுத்தமுடியும்.

அத்துடன், இரணைமடுக் குளத்திலிருந்து ஆனையிறவு கடனீரேரியில் கலக்கும் நீரை பயன்படுத்துவதன் மூலம் ஆனையிறவு, உமையாள்புரம், தட்டுவான்கொட்டி, ஊரியான் போன்ற உவர் நிலங்களை விளைநிலங்களாக மாற்றலாம்.

இரணைமடுக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் இடம்பெறவுள்ளது.

இரணைமடுக் குளத்தினை புனரமைப்பதன் மூலம் உள்ள நலன்கள்

1. குளத்தில் உள்ள நீர்மட்டத்தினை சீராக பேணல்.
2. அணைக்கட்டை உயர்த்துவதன் மூலம் விவசாய முயற்சிகள் அதிகரிக்கும்.
3. கிளிநொச்சி மாவட்ட எதிர்கால மக்கள் அதிகரிப்புக்கு ஈடு கொடுக்கும்.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்ட மக்கள் மட்டுமல்ல யாழ்ப்பாண மாவட்ட மக்களும் பயன்பெற இரணைமடுக் குளத்தின் முழுமையான புனரமைப்பு அவசியமாகிறது.

அறிவுள்ளோரின் சிறந்த தெரிவு

றோயல் குளுக்கோஸ்

100 % சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By: ROYAL INDUSTRIES COLOMBO-12 ☎0777-277670

அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்:

சிவா நறுமணப்பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் ☎ 021 222 2567

100g றோயல் குளுக்கோசின் ஆகக்கூடிய சில்லறை விலை 23.90



## உடனடி வேலைவாய்ப்பு

இலங்கையில் குறுகிய காலத்தில் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வரும் பிரபல தனியார் காப்புறுதிக் கம்பனியானது தனது காப்புறுதி சேவையினை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் பின்வரும் கிளைகளில் பின்வரும் பதவிகளுக்கு தகுதியானஇளமையும் துடிப்பும் மிக்க இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றது.

**கிளைகள்:**
யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி, சுன்னாகம்.

**பதவிகள்:**
01. காப்புறுதி உத்தியோகத்தர்கள்/ மேற்பார்வையாளர்கள். வெற்றிடம் (08)
02. காப்புறுதிக் பிரதிநிதிகள். வெற்றிடம் (60)

**தகைமைகள்:**
01. க.பொ.த. (சா/த) கணிதம் உட்பட சித்தி
02. பதவி (1) இற்கு காப்புறுதி விற்பனைத்துறையில் குறைந்தது 01 வருட அனுபவம் கட்டாயமானது.
03. மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

**அனுகூலம்:**
01. சம்பளம் பதவி (1) இற்கு மட்டும்
02. வரையறையற்ற வருமானம் ஈட்டும் வாய்ப்புகள்
03. தொழில் முன்னேற்ற வாய்ப்புகள்
04. இலவச காப்புறுதி வசதிகள்
05. வாகனக் கடன் வசதிகள்
06. சுற்றுலா வசதிகள்
07. மாதாந்த/ வருடாந்த விருதுகள் பெறும் வாய்ப்புகள்

விண்ணப்ப முடிவு திகதி: 28.06.2006

அனுப்ப வேண்டிய முகவரி: **விளம்பர இல.2894, மே/பா, உதயன்.** (51256) (39-19-14)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 02 ★ 12 ★ 1981



அரக்கன் பிடியில் 05 ★ 05 ★ 2006

**செல்வி கணபதிப்பிள்ளை கலாமதி (அபிராமி)**
**(கணக்காய்வாளர்- இ.போ.ச- வவுனியா)**

நெஞ்சுக்குள் வலிதந்து
போனாயே - எங்கள்
நெஞ்சமெல்லாம் நிறைந்திட்ட
அபிராமியே!
கண்ணுக்குள் நீர் தந்து
போனாயே - எங்கள்
கண்மணியே, கண்மணியின்
கலாமதியே!
விழிமூட மறந்து மனம்
வெம்புதம்மா- விண்மீனே!
விரைந்து நீ விண்ணை விட்டு
வாவனம்மா!

*உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

05.05.2006 அன்று அகாலமரணமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு உதவி புரிந்தவர்களுக்கும் மற்றும் அன்னாரின் புகழுடலை உரிய நேரத்தில் கிளிநொச்சிக்கு கொண்டு வர உதவி புரிந்த கிளிநொச்சி மாவட்ட அரசஅதிபருக்கும், வவுனியா அரச அதிபருக்கும், வெளிநாட்டில் இருந்தும் உள்நாட்டில் இருந்தும் தொலைபேசி மூலமாகவும் தந்தி மூலமாகவும், அஞ்சலிப் பிரசுரங்கள், மலர் வளையங்கள், மலர்மாலைகள் மூலமாகவும், துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், நேரில் வந்து அஞ்சலி செலுத்தி ஆறுதல் கூறியவர்களுக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உன் பிரிவால் வாடும்:

**அம்மா, அப்பா, அண்ணாமார், அண்ணிமார், மருமக்கள்.**

(சி.49700) (39-13-14)

### கடற்றொழிலாளர் சங்கக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டல்

'கெயர்'சர்வதேசத்தின் பங்களிப்புடன் மாரீசன்கூடல் -குசுமன் துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த புதன்கிழமை காலை 6.30 மணியளவில் மாரீசன் கூடலில் நடைபெற்றது.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்திற்கான அடிக்கலினை 'கெயர்' சர்வதேச மனித நேய உதவிகளுக்கான பணிப்பாளர் சூ .கருணாகரன் நட்டார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி. தவரட்ணம் கலந்து கொண்டார். (190)

### உதவிக் கொடுப்பனவு

பருத்தித்துறைப் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினரால் ஜூன் மாதத்திற்குரிய பொதுசன மாதாந்த உதவிப்பணம் மற்றும் தொழுநோய், புற்றுநோய், காசநோய் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டோர்களுக்கான கொடுப்பனவுகள் அந்தந்த அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி கொடுப்பனவுகளை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (117)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து 18.06.2006





4 ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறையைச் சேர்ந்த ரஜிதரன்- வனிதா தம்பதியரின் செல்வப் புதல்வன் **வசீகரன் (வசி)** தனது முதலாவது பிறந்த நாளை இன்று (18.06.2006) ஞாயிற்றுக் கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, ஐயா, டென்மார்க்கில் உள்ள தொட்டம்மா, தொட்டப்பா மற்றும் சவுதியில் உள்ள பெரியப்பா, பெரியம்மா மற்றும் இலங்கையில் உள்ள பெரியப்பாமார்கள், பெரியம்மாமார்கள், சித்தப்பா, சித்திமார்கள், மாமா, மாமிமார்கள், அத்தான், மச்சாள்மார்கள், அண்ணாமார், தம்பிமார், அக்காமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் புனித அந்தோனியார் அருள்பெற்று வசீகரனை பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

செல்வன் வசீகரன்

*4 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.*

**திரு. திருமதி ரஜிதரன் வனிதா (அப்பா, அம்மா).**

(சி.49730) (39-11-14)

ஓம்
அரி ஓம் நமோநாராயணா

## 5 ஆம் ஆண்டு நினைவு நாள்

ஸ்ரீ சக்கராழ்வார் தேவஸ்தான பிரதமகுரு

திருமதி
**ஆறுமுகம் இராசம்மா**

தோற்றம் 12.03.1919 மறைவு 13.07.2001

*திதி: 18.06.2006*



தினம் தினம் கண்ணனை மனந்தனில் எண்ணியே
திருவருளை நாமமிட்டேற்றியவர்
கோவையுறைந்தருளும் கோமகன் நாமம்
சூடிய காந்தியம்மா!

இன்று (18.06.2006) ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ சக்கராழ்வார் ஆலயத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அன்னதான நிகழ்விலும் கலந்து கொண்டு கண்ணன் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கோப்பாய் வடக்கு. *ஸ்ரீ சக்கராழ்வார் தேவஸ்தானம்.*

(சி.49697) (39-11-14)

## வடமராட்சி தெற்கு -மேற்கு பிரதேச சபை, கரவெட்டி சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான மீள் கேள்வி அறிவித்தல் -2006

எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடைகள், துவிச்சக்கரவண்டி, பாதுகாப்பு நிலையம் என்பவற்றை 01.07.2006 இல் இருந்து 31.12.2006 வரையான காலப்பகுதிக்கு நடத்துவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 26.06.2006, பிற்பகல் 15.30 மணிவரை
02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: 27.06.2006, நண்பகல் 12 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி: 27.06.2006, பிற்பகல் 15.00 மணி.

மேலதிக விவரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும் தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

### கேள்வி அட்டவணை

| தொ. இல. | குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை. | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் படிவக் கட்டணம் | வற்வரி |
|---|---|---|---|---|---|
| 01. | உடுப்பிட்டிச் சந்தை துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் | 15,150.00 | 3,000.00 | 250.00 | 37.50 |
| 02. | உடுப்பிட்டி ஆட்டிறைச்சிக்கடை | 2,850.00 | 500.00 | 250.00 | 37.50 |
| 03. | அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 85,000.00 | 3,000.00 | 250.00 | 37.50 |
| 04. | அல்வாய் தெற்கு மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 500.00 | 250.00 | 37.50 |
| 05. | நெல்லியடிச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 5,000.00 | 500.00 | 250.00 | 37.50 |
| 06. | நெல்லியடிச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 23,000.00 | 500.00 | 250.00 | 37.50 |
| 07. | கோயிற்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 500.00 | 250.00 | 37.50 |

(15.06.2006)
(சி.49724) (39-11-14)

**சி.வே.குலநாயகம்,**
செயலாளர், வடமராட்சி தெற்கு- மேற்கு பிரதேசசபை, கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்காணிப்புக் குழுவினர் பார்த்திருக்கவே திருமலையில் மக்கள் மீது ஷெல் தாக்குதல்

திருகோணமலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிகள் மீதான ஷெல் தாக்குதல்கள் கண்காணிப்புக் குழுவினர் முன்னிலையிலேயே நடத்தப்பட்டன என்று திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஆவுஸ்திரேலிய 'இன்பத்தமிழ் ஒலி'.வானொலிக்கு கடந்த வியாழக்கிழமை அவர் வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு கூறினார். அப்போது மேலும் கூறியதாவது:-

கிளைமோர் தாக்குதல் செய்தி எமக்குக் கிடைத்தபோதே திருகோணமலையில் ஷெல் வீச்சுகள் நடத்தப்பட்டன. மங்கிபிரிட்ஜ் மற்றும் திருமலை கடற்படை முகாமிலிருந்தும் பல்குழல் ஷெல் தாக்குதல் காலை 10 மணி முதல் நடத்தப்பட்டன. இத்தாக்குதல் பிற்பகல் 2.30 மணிவரை தொடர்ச்சியாக நடத்தப்பட்டது.

ஆனால், இப்பகுதிகளில் ஏற்கனவே இராணுவத்தினர் நடத்திய இத்தகைய தாக்குதலால் மக்கள் வெளியேறியதால் உயிரிழப்புக் குறைந்திருக்கிறது. இரு பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

பல வீடுகள் உடைந்து சேதமடைந்துள்ளன. சில வீடுகள் எரிந்துள்ளன. கால்நடைகள் கொல்லப்பட்டுள்ளன. கோவில்கள் மற்றும் பாடசாலைகள் சேதமடைந்துள்ளன.

இத்தாக்குதல் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்குத் தெரியப் படுத்தினோம். இத்தாக்குதல் நடந்தபோது கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த ஒரு பிரதிநிதி மூதூரில்தான் இருந்தார்.

திருகோணமலை கண்காணிப்புக் குழு அலுவலகம் இருக்கும் இடம் அருகில்தான் கடற்படை உள்ளது. அங்கிருந்து ஏவப்படும் எறிகணைகளின் சத்தங்களை அவர்கள் கண்காணிக்கக்கூடியதாக இருக்கும். ஆகையால் தாக்குதல் சத்தங்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்றும் உங்களுடைய பகுதிகளை நோக்கி ஷெல்கள் ஏவப்படுகின்றன என்றும் கண்காணிப்புக் குழுவினர் கூறினர்.

ஓர் அப்பட்டமான தாக்குதலை அனைவரது கண் முன்னாலேயே எமது பிரதேச மக்கள் குடியிருப்புகள் மீது நடத்துவது மோசமான யுத்தநிறுத்த மீறல் சம்பவம்.

இத்தகைய தாக்குதல்களைத் தொடர்ச்சியாகப் படையினர் நடத்துகின்றனர். ஆனால், நாங்கள் கண்காணிப்புப் பணியை மட்டுமே செய்கிறோம் என்று கண்காணிப்புக் குழுவினர் கூறுவதும் அர்த்தமற்றது.

கண்காணிப்புக் குழுவினர் கண்முன்னாலேயே இத்தகைய தாக்குதலை நடத்துவது மிக மோசமானது என்று கண்காணிப்புக் குழுவினருக்குச் சுட்டிக்காட்டியுள்ளோம்.

வன்னிப் பிரதேசத்தில் கிளைமோர்த் தாக்குதல்களைப் பெருமளவு நடத்த ஸ்ரீலங்கா இராணுவம் முடுக்கிவிட்டுள்ளது. விடுதலைப் புலிகளை மட்டுமில்லாமல் பொதுமக்கள், அரச அமைப்புகளின் பிரதிநிதிகள் என அனைவரையும் இலக்குவைத்துத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையணியினர் தமிழ் மக்கள் மீது இத்தகைய தாக்குதல்களை நடத்தி சினம்கொள்ளவைக்க முயற்சிக்கின்றனர்.

இந்த நிலைமையை மாற்றவேண்டும் இன்றைய பயணிகள் மீதான தாக்குதலையும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையினர்தான் செய்திருக்கவேண்டும். சிங்களப் பிரதேசத்துக்குள் இப்படியொரு தாக்குதலைப் புலிகள் நடத்திவிட்டார்கள் என்று கூறித் தங்களுக்கான அனுதாபத்தைத் தேடவே இந்தக் கிளைமோர்த் தாக்குதலை ஸ்ரீலங்கா இராணுவம் நடத்தியுள்ளது என்றார். (க)

## கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம்,ஜூன்18

யாழ்.பல்கலைக்கழகத்தின் உடற்கல்வி பிரிவினால் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று காலை 9 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

பற்றீசியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணிமோதவுள்ளது.

இறுதியாட்ட நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகபீடப் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் கலந்துகொள்வார். (190)

# தகுதியானோர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜூன்18

ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் வேலைவாய்ப்பைத் தேடும் இளைஞர்களை ஆக்கபூர்வமான தொழிலில் ஈடுபடுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் தொலைக்கல்வி நவீனமயப்படுத்தும் செயற்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயிற்சிகளை வழங்குவதற்குத் தகுதியான இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் 2005 டிசெம்பர் 31 ஆம் திகதி 22 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல்வேண்டும். அத்துடன், 2004/2005 ஜி.சீ.ஈ.உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றி வேலைவாய்ப்பின்றி இருத்தல்வேண்டும்.

இதேவேளை-விண்ணப்பதாரரது மாதாந்த குடும்ப வருமானம் 10 ஆயிரம் ரூபாவிற்கு குறைவாக இருக்கவேண்டும்.

தகுதியானவர்கள் வர்த்தமானி அறிவித்தலின்படி, விண்ணப்பத்தை ஆங்கிலத்தில் தயாரித்து ஜூலை மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் 'திட்டப்பணிப்பாளர், தொலைக்கல்வி நவீனமயமாக்கல் திட்டம் (DEMP), 35/10, முதலாவது மற்றும் இரண்டாவது மாடி, நாவல வீதி, நாரஹேன்பிட்டி, கொழும்பு -05, என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

* * *

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு, பதிவாளர் நாயகம் திணைக்களம் பதிவாளர் சேவையில் தரம் II பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கென நடத்தப்படவுள்ள போட்டிப் பரீட்சைக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இந்தப் போட்டிப் பரீட்சை எதிர்வரும் செப்ரம்பர் மாதம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

விண்ணப்பதாரர் 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்கவேண்டும். அரசசேவை / மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு வயதெல்லை பொருந்தாது.

இதேவேளை- வெளிவிண்ணப்பதாரர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சட்டம் தொடர்பான பட்டதாரியாக அல்லது சட்டக்கல்லூரியில் இறுதிச்சட்டப் பரீட்சையில் சித்திபெற்றிருக்கவேண்டும்.

உள்ளக விண்ணப்பதாரர்கள் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் பதிவாளர் சேவையில் III ஆம் தரத்தில் உறுதிப்படுத்தப்பட்ட அலுவலர்கள், அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் கீழ் கடமை புரியும் அலுவலர்கள் ஆகியோர் விண்ணப்பிக்கலாம்.

தகுதியானவர்கள் ஜூலைமாதம் 11ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைப் பதிவுத் தபால்மூலம் 'பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத்திணைக்களம், பெலவத்தை, பத்திரமுல்லை ' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

* * *

தொழில்சார் தொழில்நுட்பப்பயிற்சி அமைச்சு, தொழில்நுட்பக்கல்வி பயிற்சித் திணைக்களம் தொழில்நுட்பக்கல்லூரிகளில் நடத்தப்படும் கற்கை நெறிகளுக்கு 2006 -2007 ஆம் ஆண்டுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரர் இலங்கைப்பிரஜையாக இருக்கவேண்டும்.

தகைமையுள்ளவர்கள் உளச்சார்பு பரீட்சைப் பெறுபேறு, நேர்முகப் பரீட்சைப் பெறுபேறு ஆகியவற்றின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர்.

விண்ணப்பதாரர் வெவ்வேறு பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கும் போது வெவ்வேறு விண்ணப்பப்படிவங்களில் ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் தனித்தனியே விண்ணப்பிக்கலாம்.

தகுதியானவர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் 'எச்.எல்.ஒபேயசேகர, பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம், த.பெ.இல.557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10' என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.


# 31ஆம் நாள் நினைவலையும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 18 . 03 . 1935



உதிர்வு 20 . 05 . 2006

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து
எங்கள் குடும்பத்தின் தலைவராய் இருந்தீரே
இன்முகம் காட்டி நேசமாய் பழகி
உற்றநேரத்தில் உதவிகள் பல புரிந்து
என்றும் நல்லவராய் இன்சொல் பேசி மகிழ்ந்தீரே!
எங்களை விட்டு ஏன் தான் பிரிந்தீரோ?
உம் பாசம் வேண்டித் தினந்தவித்து
உம் ஆத்மா சாந்திக்காகப் பிராத்திக்கின்றோம்.

அமரர்
## சுப்பையா சொக்கநாதன்
(உரிமையாளர், நாதன் பிரதேஸ் கொழும்பு)

எமது குடும்பத்தவரின் மறைவுச் செய்தி கேட்டு ஆறுதல் கூறியோருக்கும் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், உதவிகள் வழங்கிய அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதோடு அவரது இல்லத்தில் (18.06.2006) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

சுப்பையா குடும்பத்தினர்
இணுவில் தெற்கு, இணுவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துர்க்கா திருமண மண்டபம்

மங்களகரமான சகல வைபவங்களுக்கும்

சாவகச்சேரி

**அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

(ஆயிரம் பேர் அடங்கக் கூடியது. தற்போது உள்ள சூழ்நிலைக்கு ஏற்ற சூழலில் அமைந்துள்ள மண்டபம்)

உங்கள் வாழ்வின்
சகல மங்களகரமான நிகழ்வுகளுக்கும்
மற்றும் சுவையான உணவிற்கும்
வெளியூர் வைபவங்களை ஒட்டி நடைபெறும்
விருந்துபசார விழாவிற்கான உணவிற்கும்
முன்கூட்டியே எம்முடன் தொடர்புகொள்ளவும்.

**நிர்வாகம்.**

(51174)(32-17-11)


## மூன்றாவது சிராத்த தினம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 - 04 - 1942 | 26 - 06 - 2003 |



### அமரர் செல்லையா செல்வரத்தினம்

*(தேவி கொமினிக்கேசன், கொழும்புத்துறை)*

*திதி: அட்டமி 18-06-2006*

சொத்துக்கள் தேடி சொப்பனம் தேடி,
சத்துக்கள் தேடி சந்தோஷம் தேடி,
முத்தாக எம்மை முன்வைத்த தலைவா!
வெற்றாக வேறாக மாறி விதிவிளையாடியதோ?
காலமெல்லாம் கண்ணீரில் வாழ்கின்றோம் தலைவா!
கடவுளாக வந்துஎம் கவலையைத் தணிப்பாயா?

உமது ஆத்மசாந்திக்காக என்றும் இறைஞ்சும்

*தேவி கொமினிக்கேசன்,*
*கொழும்புத்துறை.* (51269)(26-32-11-17)

**மனைவி, மக்கள்,**
**குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 - 11 - 1938 | 18 - 05 - 2006 |



### திருமதி கனகம்மா சிங்கராசா

*(ஓய்வுபெற்ற ஆசிரியை)*

திதி: அபரபக்க ஷஷ்டி

இல்லறத்தில் நல் உத்தமியாய்
கல்வி கற்பிப்பதில் நல்லாசிரியையாய்
நல்லறிவுரை கூறுவதில் சான்றோனாய் வாழ்ந்து
சொல்லாண்ட சுருதியான் சிவன் பாதம் அடைந்தாயே அம்மா.

**கோகுல வீதி,**
**கோண்டாவில் வடக்கு.**

**கணவர்,**
**உறவினர்கள்.**

(51327)(26-32-11-17)


## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

**T.R.R.O Computer Training Centre**

*கணினிக் கற்கை நெறிகளுக்கான...*

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**Diploma Courses**
- Diploma in Information Technology
- Diploma in Microsoft Office
- Diploma in Desktop Publishing
- Diploma in Graphic Designing

**Kids Programme**
- Fundamental of IT
- Microsoft Windows XP
- Word Processing & Spread sheets
- Graphics & Multimedia
- 2D and 3D Games

**Certificate Courses**
- Ms Word XP
- Ms Excel XP
- Ms Access XP
- Adobe PageMaker 7.0
- Adobe Photo Shop 7.0
- Corel Draw 12
- Visual basic 6.0
- Auto CAD 2005
- Turbo Pascal 7.0

விண்ணப்பபடிவங்களை இங்கே பெறலாம்

T.R.R.O Computer Training Center
106, 4th Cross Street,
Jaffna.
Branch Office :- MC Leod Hospital
K.K.S Road, Inuvil.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
**தலைவர்,**
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
106, 4ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்.

விண்ணப்ப முடிவு திகதி
30.06.2006


## மரண அறிவித்தல்கள்

### வேலன் நாகன்



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கலாசாலை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் நாகன் 16-06-2006 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் நாகியின் அன்புக் கணவரும் தியாகராசா, நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் சங்கரப்பிள்ளை (மாவட்ட வைத்தியசாலை, சாவகச்சேரி), கலாறஞ்சிதமலர் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மணிமேகலை, சூரி (லண்டன்), இராஜகருணா, மோகனபதி, இராஜரட்ணம், அகிலேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஐங்கரன், மயூகரன், செந்தூரன், தட்சாயினி, ஜெனனி, நிஜானி, நிரோசன், கவிதா, சாரங்கன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் நிஷாம், பத்மநிஷா, அட்சயன், அட்சினி ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-06-2006) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கலாசாலை வீதி,**
**திருநெல்வேலி.**
(51326)(26-32-11-17)

தகவல்:
**சங்கரப்பிள்ளை**
*(மகன்).*

### இராசையா பரமேஸ்வரன்

இணுவில் கிழக்கு, அங்களப்பாயைப் பிறப்பிடமாகவும் சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா பரமேஸ்வரன் 14-06-2006 அன்று சுவிற்ஸர்லாந்தில் காலமானார். இவர் காலஞ்சென்றவர்களான இராசையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் சுப்பிரமணியம்- இராஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் தேவிமனோகரியின் அன்புக் கணவரும் கபாஸ்கர், பபாஸ்கார் ஆகியோரின் அன்புத் தந்தையும் சண்முகலிங்கம் (இணுவில்), இராசேஸ்வரி (கிளிநொச்சி), யோகேஸ்வரி (ஜேர்மனி), கமலேஸ்வரி (இணுவில்), பத்மாதேவி (ஜேர்மனி), திருஞானசம்பந்தன் (சுவிஸ்), திருநாவுக்கரசு (ஜேர்மனி), திருஞானசோதி (லண்டன்), அருந்தவராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (19-06-2006) திங்கட்கிழமை ஒரு மணியளவில் சுவிற்ஸர்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அங்களப்பாய்,
இணுவில் கிழக்கு.
இணுவில்
(51329)(26-32-11-17)

தகவல்:
**இ.சண்முகலிங்கம்**
**(சகோதரன்)**
**அங்களப்பாய்,இணுவில்.**

### கடும் வெப்பத்தினால் குளங்கள் வற்றின

தென்மராட்சி, ஜூன்18

வரணிப்பகுதியில் வயல் நிலயங்களுக்கு மத்தியில் அமைந்துள்ள குளம், குட்டைகள் தற்சமயம் நிலவும் கடும்வெப்பம்காரணமாக வற்றியுள்ளன.

பருவமழை இல்லாத காரணத்தினாலும் கூடிய சூரிய வெப்பம் காரணமாகவும் இந்த நீர் நிலைகள் வற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் இந்த வயல் நிலங்களில் மேயும் கால்நடைகள் குடிப்பதற்கு தண்ணீரைத் தேடி அலைவதைக்காண முடிகிறது. (122)


**Immediate Vacancy**

**ITDG/OOTRU Partnership Programme**
**Project Officer - Renewable Energy**

In order to promote renewable energy technologies in the Jaffna district especially, in the areas affected by Tsunami, a Project Officer is immediately required

**Renewable Energy Sources** - Solar, Wind, Biogas, Biomass etc.

**Qualification** - B.Sc.Eng. or equivalent technical qualifications with field experience.

The applicants are required to send their bio -data on or before 25th June 2006 to the following address.

**The Director,**
**Ootru Organisation,**
**40, Temple Road,**
**Jaffna.**

**Tel: 021 - 2223668,**
**021- 2264505**
**Email - cngosj@sltnet.lk.**

(51294)


## நீங்கா நினைவில் ஓராண்டில்



### திருமதி சின்னத்துரை கமலாவதி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02-06-1954 | 29-06-2005 |

என்றும் உனை மறவோம் அம்மா
அன்பின் இருப்பிடமே!
பண்பின் அன்னையே!
எம்மை ஆளாக்கிய தாயே!
உங்கள் ஆத்மாசாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நிரந்தர முகவரி:*
*புன்னாலைக்கட்டுவன் தெற்கு,*
*சுன்னாகம்.*
*தற்காலிக முகவரி:*
*உமையாள்புரம்,*
*பரந்தன், கிளிநொச்சி.* (51318) (32-17-11)

பாசப்பிரிவுடன்:
**மகன் S.சிவசுதன் (கண்ணன்),**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்கள்

### இராஜா சதானந்தன்

*(இளைப்பாறிய உத்தியோகத்தர், விவசாயத் திணைக்களம், தொழில்திணைக்களம்)*

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜா சதானந்தன் அவர்கள் 16.06.2006இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - இராஜா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற பொன்னுத்துரை தம்பதியரின் மூத்த மருமகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் மனோராஜ், சாவித்திரி, சுகாந்தினி, மகிந்தராஜ், ஜெகன்ராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கேஸ்வரி, சிவபாலன், பாலேந்திரன், புவியரசி, பரிமளா, ஆகியோரின் அன்பு மாமனும் பாலாம்பிகை, லீலாவதி, இராமனாதன், நிமால்ராஜ், சாவித்திரி, சுசாந்தா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் துர்க்கா, சிந்துகா, சாயி, சரண்யா, சாயி பிரஷாந்த், பிராமி,வருணி, பிரியந்தன், யுவாணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2006) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'சுகஸ்தான்'*
*சங்குவேலி,*
*மானிப்பாய்.*

தகவல்:
**குடும்பத்தினர்.**
(51312)(32-17-11)

### செல்வி திருத்தேவி கந்தையா



கொக்குவில் கிழக்கு,பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி திருத்தேவி கந்தையா அவர்கள் 15.06.2006 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா -மகேஸ்வரி தம்பதியரின் புத்திரியும் காலஞ்சென்ற விமலேந்திரி மற்றும் ஆனந்தன்(சிங்கப்பூர்),சரஸ்வதி (கொழும்பு), காலஞ்சென்ற தனபூசணி (ராணி) மற்றும் சுந்தரேசன்(ஓசன் ரேடர்ஸ்),காலஞ்சென்ற ஜெகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(18.06.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பொற்பதி வீதி,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.** (51324)(32-17-11)

தகவல்:
**சகோதரர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகிறோம்



P.கருணாநிதி,சாயி போட்டோ
1010/11, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,யாழ்ப்பாணம். (51321)

பிரம்படி, கொக்குவிலைச் சேர்ந்த
நாடகக் கலைஞர்

**கணபதிப்பிள்ளை ஜீவகாருண்யம்**

அவர்கள் 22.05.2006 அன்று கலா பூஷணம் விருது பெற்றமையை யிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**இரா. பற்குணம்,**
**வண்ணை, கலைவாணர்**
**நாடகமன்றம்.**

## சிறுவர் ஆக்கத் திறனை வெளிப்படுத்தும்




செயல் திறன் அரங்க இயக்கம்
Active Theatre MOvement

காலம்: 19.06.2006 (திங்கள்) நேரம்: 9.30-3.30
இடம்: யா/நாவற்குழி மகாவித்தியாலயம்.

## இன்றைய பிறந்தநாளில் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்
## 16 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்
18 - 06 - 1918



மறைவு
09 - 04 - 1990

### அமரர் உவில்லியம் ஞானசிகாமணி அன்னப்பா

(இளைப்பாறிய அதிபர் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)

*'' மனிதருக்கென்றே ஊழியம் செய்யாமல்*
*கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ் செய்யுங்கள்''*
*(எபேசியர் 6: 8)*

(சி-49737)

யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## துயர் பகிர்கின்றோம்



### கந்தையா கந்தசாமி

*(வேளாண் பகுதி திட்ட மேலாளர் - வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனம்)*

எமது நிறுவனத்தின் வேளாண் பகுதி திட்ட மேலாளராகப் பணியாற்றும் இணுவிலை வதிவிடமாகக் கொண்ட கந்தையா கந்தசாமி (ஓய்வுபெற்ற விவசாயப் போதனாசிரியர் - கிளி) 2006.06.15ஆம் நாளன்று சாவடைந்துள்ள செய்தி எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன், எமது நிறுவனமும் துயரை பகிர்ந்து கொள்கின்றது.

*வன்னி வேளாண்*
*தொழில்நுட்ப நிறுவனம்,*
*இல. 41, கரடிப்போக்கு,கிளிநொச்சி.* (சி-49734)

**பணிப்பாளர்,**
**பணியாளர்கள்.**

## மோ. சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன்18

யாழ். நகரப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருட்டுப் போனதாக யாழ். பொலீஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

உரும்பிராயைச் சேர்ந்தவரான நாகமுத்து சுந்தரம் என்பவர் தனது மோட்டார் சைக்கிளை பழைய வின்சர் திரையரங்க வளாகத்தில் நிறுத்திப் பூட்டிவிட்டு பணிக்குச் சென்றார் என்றும் -

பின்னர் திரும்பி வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிளைக் காணவில்லையென்றும் - முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தாளையடியில் நிரந்தர வீடுகள் அமைக்கும் திட்டம்

வட்டக்கச்சி, ஜூன்18

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தாளையடி கிராம மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த 3ஆம் திகதி நடைபெற்றது.

வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் சி.செபரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பங்குத்தந்தை அன்ரனிதாஸ், தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, மருத்துவ கலாநிதி சூரியகுமார், வடமரார்ட்சி கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் செல்வம், வடமராட்சி கிழக்கு சமாசத் தலைவர் நடராஜா ஆகியோர் பங்கேற்றனர்.

82 நிரந்தர வீடுகளை அமைக்கும் இத் திட்டத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் வடமராட்சி கிழக்கு புனர்வாழ் வுக் கழகம் நடைமுறைப் படுத்தவுள்ளது.

இத்திட்டத்திற்கான நிதி உதவியை 'அக்சன் எயிட்' நிறுவனம் வழங்குகின்றது. (405)

**புதிய வெளியீடு**



யுனிவர்சிட்டி புகழ் ஜீவன், சோனியா அகர்வால், விவேக் நடித்த

**திருட்டு பயலே**

**மனோகரா**
யாழ்ப்பாணம்
10.30, 2.30, 6.30 மட்டும்

## வீடு வாடகைக்கு உண்டு

3 அல்லது 4 பேர் கொண்ட சிறு குடும்பத்திற்கு குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: கம்பஸ் லேன்,
திருநெல்வேலி,
தொ.பே.: 0779310155 (51316)

## தேவை

வாடகைக்கு வீடு தேவை
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி
121, கந்தர்மடம்,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 222 3817,
222 7125, 077 3611282 (51317)

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்

காட்சி நேரம் : 10.30, 2.30
சத்தியராஜ் (மாறுபட்ட 9 வேடம்),
சூசன், விவேக், அப்பாஸ் நடித்த
**"வணக்கம் தலைவா"**
(சி-49188)

**ராஜா** யாழ்ப்பாணம்

பரத், பத்மபிரியா, ஆர்யா நடித்த
**பட்டியல்**
புதிய வெளியீடு
(சி-47139)
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்

## மரண அறிவித்தல்

### திருமதி கிட்டிணன் அம்மா

கேணியடி, இமையாணனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிட்டிணன் அம்மா அவர்கள் நேற்று (17.06.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் இளையவன் கிட்டிணன் அவர்களின் அன்பு மனைவியும் அமரர் தியாகராஜா, கமலம், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் இன்பராணி, அமரர் தருமலிங்கம் (புறோக்கர்), மெய்யழகன் (நடேசு) ஆகியோரின் அருமை மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
[illegible]
(சி-49739)



**அல்வாய் வடக்கு அருள்மிகு அரசடி விநாயகர் ஆலயம்**
**புனராவர்த்தன அஷ்டபந்தன நூதன பிரதிஷ்டா**
**மஹா கும்பாபிஷேகப் பெருவிழா விஞ்ஞாபனம்**
**18.06.2006**

மெய் அடியார்களே!

அருள்மிகு அரசடி விநாயகர் ஆலய மஹாகும்பாபிஷேக பெருவிழா ஆனிமாதம் 4ஆம் நாள் இன்று (18.06.2006) ஞாயிற்றுக்கிழமை, ஸப்தமியும் பூரட்டாதி நட்சத்திரமும் கூடிய காலை 6.55 மணி முதல் 7.55 மணி வரையுள்ள மிதுன லக்கின சுபமுகூர்த்தத்தில் புனராவர்த்தன அஷ்டபந்தன நூதன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. அடியார்கள் அனைவரும் வருகை தந்து விநாயகர் அருளை பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

பிரதிஷ்டா பிரதம குரு
வேதாகம பண்டித பிரதிஷ்டா சிரோன்மணி
***சிவஸ்ரீ ஐ.கைலைவாமதேவக் குருக்கள்*** (நயினை)

*குறிப்பு: கும்பாபிஷேகத்தை தொடர்ந்து மண்டலாபிஷேகம் 12தினங்கள் நடைபெறும். 13ஆம் நாள் வெகுசிறப்பாக சங்காபிஷேகம் நடைபெறும்.*

**-ஆலய பரிபாலன சபை.**

அரசடி விநாயகர் ஆலயம்,
அல்லாய் வடக்கு,
அல்வாய். (சி-49735)

மீண்டும் புதுப்பொலிவுடன்
வெளிவந்திருக்கிறது

**பூங்கனி** சிறுவர் மாத இதழ்



நாடுமுழுவதும் பரபரப்பான
விற்பனையில்

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா கண்ணகை

மட்டக்களப்பு, ஒந்தாச்சி மடத்தைப்பிறப்பிடமாகவும் இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கண்ணகை 17.06.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் யோகச்சந்திரன்,ஜெயரத்தினம் (அப்பன்), ஜெயந்தி, ஜெயதரன், வசந்தி ஆகியோரின் தாயும் நித்தியானந்தத்தின் சிறிய தாயும் சைலா, ஜெயானந்தன் (ஜெயன்), சுஜித்தா, சுகதாஸ் (வண்ணம்), மனோரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(18.06.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செல்வம் வீதி,*
*இமையாணன் மேற்கு,உடுப்பிட்டி.* (51331)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### கந்தையா கந்தசாமி (சண்முகம்)

*(ஓய்வுபெற்ற விவசாயப் போதனாசிரியர், கிளிநொச்சி)*

தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கைப் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கந்தசாமி அவர்களின் இறுதிக்கிரியைகள் இன்று(18.06.2006) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் 8.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவவதி,*
*இணுவில் மேற்கு,இணுவில்.* (51334)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### திருமதி வல்லிபுரம் அன்னம்மா

மீசாலை, வங்களா வீதியைச் சேர்ந்த திருமதி வல்லிபுரம் அன்னம்மா அவர்கள் நேற்று(17.06.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரத்தின் அன்பு மனைவியும் சரஸ்வதியின் அன்புத் தாயும் நாகலிங்கத்தின் மாமியும் தங்கவேல் (எழுதுநர், சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம்), திருமதி இந்திராணி(தாதிய உத்தியோகத்தர் மாவட்ட வைத்தியசாலை- சாவகச்சேரி), ஸ்ரீகரன் (ஆசிரியர் மகளிர் கல்லூரி - சாவகச்சேரி), கருணாகரன் (ஆசிரியர் நாவற்குழி மகா வித்தியாலயம்) ஆகியோரின் பேர்த்தியும் திவாகரன், திருநீலன்(சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்கள்), ஜெகபிரசங்கா (சா.இ.ஆரம்ப பாடசாலை), அருணன், அபிசாலினி, கிருஸ்ணப்பிரியன், சாமிலன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(17.06.2006) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வங்களா வீதி,*
*மீசாலை மேற்கு,மீசாலை* (சி-49738)

**தகவல்:**
**நா.தங்கவேல்(பேரன்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகள் பகுதி சமுர்த்தி அலுவலர் மட்டக்களப்பில் சுடப்பட்டார்

மட்டக்களப்பு, ஜூன்18

மட்டக்களப்பில் நேற்று சமுர்த்தி அலுவலர் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதில் அவர் காயமடைந்தார். மற்றொரு சம்பவத்தில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். மாவடி வேம்பு என்ற இடத்தில் நேற்று முற்பகல் பொன்னுத்துரை கருணாநிதி (வயது 37) என்ற சமுர்த்தி அலுவலர் இனம்தெரியாத நபர்களால் சுடப்பட்டார்.

இதில் படுகாயமடைந்த அவர் ஆபத் தான நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் உள்ள ஈரல் சுட்டகுளம் பகுதி சமுர்த்தி அலுவல ரான இவர் அலுவலகக் கடமையின் நிமித்தம் மாவடி வேம்புக்கு வந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு சந்திவெளிப் பகுதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் -

அதே இடத்தைச் சேர்ந்த வரான இராசமுத்து இராசநாயகம் (வயது 43) என்பவர் இனம்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.



விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டிலுள்ள நயினாமடுப் பகுதியில் தாக்குதல் நடத்த வந்த இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையணி மீது பதில் தாக்குதல் நடத்தி ஊடுருவியவர்களில் ஒருவரை சுட்டுக்கொன்ற மக்கள்படையைச் சேர்ந்த ஜெயா என்பவருக்கு வவுனியா மாவட்டக் கட்டளைத் தளபதி வேலவன் பரிசளித்துப் பாராட்டுவதை படத்தில் காணலாம்.

## பேசாலையில் படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பித்தனர் என்று கூறப்படுகிறது.

முதலில் கரையோரக் குடியிருப்புப் பகுதியில் படையினர் கண்மூடித் தனமாகச் சுட்டனர்.

பின்னர் மக்கள் தஞ்சமடைந்த தேவாலயத்துக்குள் கிரனேட்டுகளை வீசியதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர்.

கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலை மேற்கொள்ளவென அமைத்திருந்த 16 வாடிகள், 25குடியிருப்புகள், 40 படகுகள் மற்றும் வெளி இணைப்பு இயந்திரங்கள், வலைகள் ஆகியனவும் தீக்கிரையாக்கப்பட்டன.

குடியிருப்புகள் மீதான தாக்குதல்களில் கடற்றொழிலாளர்கள் நால்வரும் தேவாலயத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் அங்கு தஞ்சமடைந்திருந்த மூதாட்டி ஒருவரும் கொல்லப்பட்டனர். இத் தாக்குதல்களில் படுகாயமடைந்த மேலும் 54 பேர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத் தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதியில் பதற்றம் நிலவுகிறது.

இதேவேளை, எரிக்கப்பட்ட படகு ஒன்றுக்குள் இருந்து சடலம் ஒன்று மீட்கப்பட்டதாக பிந்திக்கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்தது.

## சூனியப்பிரதேசத்தில் மீட்கப்பட்ட சடலம் இனம் காணப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன்18

எழுதுமட்டுவாள் சூனியப்பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை மீட்கப்பட்ட இளைஞரின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த இச்சடலம் -

பருத்தித்துறையைச் சேர்ந்த சிறிரவீந்திர ராஜா தினேஸ்வரன் (வயது 16) என்பவரது என்று அவரது தாயார் அடையாளம் காட்டியுள்ளார்.

## படையினரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்புலிகள் பதில் தாக்குதல் நடத்தியதில் கடற்படையினரின் 3 படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. மற்றொரு படகு சேதமடைந்தது. 12 கடற்படையினர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமடைந்தனர். புலிகள் தரப்பில் போராளிகள் இருவர் சிறிய காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்த மோதலில் கடற் படையினரிடமிருந்து பி.கே.எல்.எம்.ஜி. ரகத் துப்பாக்கிகள் - 2, ரி.56 - 2 ரகத் துப்பாக்கிகள் - 3, எம்.இ. 5 ரக துப்பாக்கி - 1, தொலைத் தொடர்பு சாதனங்கள் - 2 ஆகியவற்றுடன் கைக்குண்டுகள், தோட்டாக்கள் என்பன கீடற்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

- என்று விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

## புலிகள் பிடித்த ஆயுதக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேனைக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்ற போது பன்குடாவெளி வாவிக்கரையோரப்பகுதியை விடுதலைப் புலிகளின் சுற்றிவளைத்துத் தேடுதலில் சுந்தரலிங்கம், திருநாவுக்கரசு ஆகியோர் பிடிபட்டிருந்தனர்.

இவர்களை மீட்பதற்காக மட்டக்களப்பு இராணுவப் புலனாய்வுப் பிரிவு அலுவலகமான பற்பொடிக் கம்பனியிலிருந்து வந்த புளொட் உறுப்பினர் பிரதாபன் வாவியில் வைத்து பிடிக்கப்பட்டார்.

இவர்களில் கதிர்காமத் தம்பி இதயராசா (வயது - 25) தெரிவித்த தகவலில்:-

தீவுச் சேனையில் கருணா குழு முகாமில் நின்ற என்னிடம் மற்றொரு உறுப்பினரான சுந்தரலிங்கம் திருநாவுக்கரசுவிடமும் கருணா குழுவின் முக்கிய உறுப்பினரான பிள்ளையான் மற்றும் ருத்திரா ஆகியோர் தொடர்பு கொண்டு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சென்று தாக்குதல் நடத்துமாறு கூறினர்.

இத்தாக்குதலுக்கான ஏற்பாடுகளை மட்டக்களப்பு இராணுவப் புலனாய்வு முகாமான பற்பொடி கம்பனியிலுள்ள சுரேஸ் என்பவர் மேற்கொள்வார் எனவும் கருணா குழுவைச் சேர்ந்த பிள்ளையான் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து எம்மை கருணா குழுவினர் வான் ஒன்றில் ஏற்றிவந்து மட்டக்களப்பு பற்பொடிகம்பனியில் விட்டனர். இதனையடுத்து இராணுவப் புலனாய்வைச் சேர்ந்த சுரேஸ் இராணுவ பவள் வாகனத்தில் மட்டக்களப்பு ஆறுமுத்தான் குடியிருப்புக்கு ஏற்றி வந்தார்.

பின்னர்இரவு 7.30 மணியளவில் தோணி ஒன்றில் ஏற்றி பன்குடா வெளியூடாக வந்து இலுப்படிச் சேனையில் கிளைமோர் தாக்குதல் முயற்சியில் ஈடுபட வைத்தனர்.

அது மாத்திரமன்றி குறிப்பிட்ட இலக்கு என்று எவையும் அல்ல. பொதுமக்களின் வாகனங்கள் வந்தாலும் தாக்குதல் நடத்துமாறு சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவு தம்மிடம் கூறினர். இவ்வாறு ஊடகவியலாளர்களிடம் கருணா குழுவைச் சேர்ந்த அகிலன் தெரிவித்தார்.

இதேவேளை - விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கருணா குழுவின் மற்றைய உறுப்பினரான சுந்தரலிங்கம் திருநாவுக்கரசு காலில் சூடுபட்டு விழ அந்த நபரையும் தூக்கிக்கொண்டு பன்குடா வெளி வாவி ஓரமாகவுள்ள பற்றைக் காட்டுக்குள் சென்று மறைந்து கொண்டு பிள்ளையானுடன் கையடக்கத் தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு தம்மை காப்பாற்றுவதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு கூறியதாகவும் அகிலன் குறிப்பிட்டார்.

பின்னர் பிள்ளையான் இராணுவப் புலனாய்வு பிரிவைச் சேர்ந்த சுரேஸிடம் தொடர்பை ஏற்படுத்துமாறு கூறியதாகவும் இதற்கேற்ப தொடர்பை ஏற்படுத்தியபோது பன்குடாவெளி பகுதிக்கு ஆட்டிலறி எறிகணைத் தாக்குதல் நடத்துகிறோம் நீங்கள் வாவியைக் கடந்து வாருங்கள் என சுரேஸ் கருணா குழு உறுப்பினர்களிடம் தெரிவித்ததாகவும் அகிலன் ஊடகவியலாளர்கள் மத்தியில் தெரி வித்துள்ளார்.

## வான் தாக்குதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கும் அந்த சக்தி களே பொதுமக்கள் மீதான தாக்குதலை நடத்தி நிலைமையை மேலும் கொழுந்து விட்டு எரியச் செய்துள்ளனர். ஒரு முழு அளவிலான யுத்தத்தைத் தூண்டியுள்ளனர்.

ஒஸ்லோவில் இலங்கை அரசாங்கம் பொறுப்புடன் நடந்து கொள்ளததாலும் ஐரோப்பிய ஒன்றியத் தடைக்குப் பின்னைய சூழ்நிலையால் இருதரப்பு சமநிலை பாதிக்கப்பட்டுள்ளதாலும் இலங்கை ஒரு யுத்தத்தை நோக்கியுள்ளது.

விமானக் குண்டு வீச்சுக்கள் மூலம் பொதுமக்கள் குடியிருப்புகளை பொறுப்பற்ற முறையில் தாக்கியமைக்கு இலங்கை அரசாங்கம் தான் பொறுப்பேற்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பதில் தாக்குதல் நடத்த நேரிடும் என்ற தமிழர் தலைமைப் பீடத்தின் கடும் எச்சரிக்கையை இலங்கை அரசுக்குத் தெரியப்படுத்தி உள்ளோம் என்றார் சு.ப. தமிழ்ச்செல்வன்.

## ஜா-எல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சையின் பின்னர் அவர் கள் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இச்சம்பவத்தையடுத்து கற்பிட்டி முதல் வத்தளை வரையான பகுதியில் படையினர் தேடுதல் நடத்தினர் என்றும் -

இதன்போது விடுதலைப் புலிகள் என்று சந்தேகிக்கப்படும் மேலும் மூவர் கைது செய்யப்பட்டனர் என்றும் -

நீர் மூழ்கி அங்கிகள் சில கண்டெடுக்கப்பட்டன என்றும் -

பொலீஸ் மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ தெரிவித்தார்.

இதேவேளை வென்னப்புவ, உள்பிட்டியாவ கடற்பகுதியில் மிதந்து கொண்டிருந்த பொதியொன்றை மீனவர்கள் மீட்டனர் என்றும் -

அதில் சக்தி வாய்ந்த சி - 4 ரக வெடிமருந்து 25 கிலோ அடங்கிய வெடிகுண்டும், டெட்டனேட்டர்கள் இரண்டும், 4 மீற்றர் வயரும் இருந்தன என்றும் -

பொலீஸ் மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் விடுக்கும் கோரிக்கைக்கு ஜனநாயக அரசு என்கிற வகையில் இலங்கை அரசால் இணங்க முடியாது.

இவ்வாறு அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்கவுள்ள பின்லாந்திற்கும் அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டினை வெளிவிவகார அமைச்சர் மங்களசமவீர விளக்கவுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு தனியான அரசாங்கம் இல்லாததால் அதற்கு இராஜதந்திர தகுதி வழங்குவதற்கான எந்தவொரு நடவடிக்கைக்கும் இலங்கை அரசாங்கம் உடன்படாது என்று நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்முக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


100% Practical Oriented training

HARDWARE Networking

செய்முறைப் பயிற்சிக்கென்றே பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட ஆய்வுகூட வசதியுடன்

Fast Track

Just 15 Days

Limited Seats only

enroll immediately

Start on 26/06/2006

UNIT Education 16/1, Killner Lane, Jaffna. (Near Pandikoddu Pillaiyar Kovil)



Vacancy

Working Director

(As a business Partner with an initial Investment of Rs. 500,000)

for an

Education Institute in Jaffna

- (Recognized International Examination Center)

For more information:

T.P. 0777 715987.



யாழ்ப்பாணம் - கொழும்பு மேலதிக விமான சேவை

18.06.2006

தொடர்புகளுக்கு:

MANOJ AIR TOURS (PVT) LTD.

32, Clock Tower Road,

T.P.: 021 222 3916, 0777 517019, 0777 801038.


## மரண அறிவித்தல்

### இராசேந்திரம் அமுதவல்லி

காரைநகர், தலகாட்டைப் பிறப்பிடமாகவும் கருங்காளியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் அமுதவல்லி அவர்கள் நேற்று (17.06.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் இராசேந்திரத்தின் அன்பு மனைவியும் மகேந்திரனின் அன்புத் தாயும் சூரியகுமாரியின் அன்பு மாமியாரும் திலக்ஷசன், நிஷாந்தன், லக்கி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2006) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகேந்திரன்.
(மகன்).

கருங்காலி,
காரைநகர்.

(சி- 49740)


புலமைப்பரிசில் திட்டம் @ AIMS

A/L பரீட்சை எழுதிய மாணவர்களே!
உங்கள் O/L பெறுபேறுகளுக்கு அமைய
புலமைப்பரிசில் திட்டம் (விவரம் உள்ளே)



EXPOAIR எக்ஸ்போ ஏயார்

your friend in the skies...

வானத்தில் உங்கள் நண்பன்...





யாழ் – கொழும்பு

விமான பயணத்திற்கு அழையுங்கள்:

யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/ 6297, 0772 349999/ 8888

கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290/ 91

Email: jaffna@expoavi.com reservations@expoavi.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.06.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.